Registered as a news paper. இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



NEW NAVENA

NAKAIYAKAM

நியூ நவீனா நகையகம்

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

189, Kasthuriar Road,
Jaffna.

(சி-244)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 22 (27.12.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 87

# மீள்குடியேற்ற நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

**இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் தற்போது அடர்த்தியான இராணுவ ஆக்கிரமிப்பின் கீழிருக்கும் தங்கள் வீடுகளுக்கும் கிராமங்களுக்கும் மீளச்சென்று குடியேறுவதற்கு இராணுவத் தலைமைப்பீடம் விதிக்கும் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் யதார்த்தத்திற்குப் புறம்பானவை என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது கிளிநொச்சி தலைமைச் செயலகத்திலிருந்து நேற்று வெளியிட்ட ஓர் உத்தியோகபூர்வ அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது.**

யாழ்ப்பாண இராணுவத் தளபதி இது தொடர்பாக விதித்துள்ள நிபந்தனையில், உயர்பாதுகாப்பு வலயங்களைத் தளர்த்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்று நிர்ப்பந்தித்திருப்பது சமாதானத்துக்கும் இயல்பு வாழ்க்கைக்குமான பாதைக்கும் இராணுவம் ஏற்படுத்தும் தாண்டமுடியாத தடைகள் என இந்த அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை களைவதும் அவற்றைச் செயலிழக்கச் செய்வதும் தற்போதைய கட்டத்தில் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த முடியாத விடயங்கள். இவை தமிழ் மக்களின் உயிர்காப்பு, பாதுகாப்பு என்பனவற்றுடன் தொடர்புடைய சீரிய அம்சங்கள். சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய

(10ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடி சம்பவம் குறித்து புலிகள் - பொலிஸார் சந்திப்பு

நெல்லியடியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக, பொலிஸார் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படுவர். சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தால் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இணக்கம் காணப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 11 மணிக்கு யாழ். போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இவ்விணக்கம் ஏற்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் - யாழ்.மாவட்ட அரசியற்பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், பொலிஸ் தரப்பில், பிரதிப்பொலிஸ் மா அதிபர் எட்வேட் விதாரண, ஏ.எஸ்பி. ஜெயசேகர ஆகியோர் கலந்து கொண்டனர். போர் நிறுத்தக் கண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படைச்சமநிலையைப் பாதிக்காமல் இரு தரப்பினரும் கலந்து பேசலாம்

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இருந்த படை சமநிலையின் விளைவாகத்தான் போர்நிறுத்த ஒப்பந்தம் உருவாகியிருக்கின்றது. அந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மேல்தான் சமாதானப் பேச்சுகள் நடக்கிறது. அதில்தான் அரசியல் தீர்வும் தங்கியிருக்கிறது. இவ்வாறு உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீள் குடியேறுவது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே கொழும்பில் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மயக்கமடைந்து வீழ்ந்தவர் சடலமாக ஆஸ்பத்திரியில்!

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள வீடொன்றின் முன்னால் மயக்கமடைந்து வீழ்ந்த நபர் ஒருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க இந்நபரின் வாயினால் இரத்தம் வெளியேறிய நிலையிலும் கழுத்துப் பகுதியில் ஒரு சிறு காயமும் காணப்பட்டது.

இந்நபரின் சடலம் இனங்காணும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நபர் ஒரு அரைக் காற்சட்டையும், நீல நிறசேட்டும் அணிந்திருந்தார்.

(60)

## ஹொவ்டே - பொன்சேகா கொழும்பில் சந்தித்துப் பேச்சு

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயும், யாழ். பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் நேற்று சந்தித்துப் பேசியுள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற இச் சந்திப்புப் பற்றி நமது நிருபரிடம் கருத்துக் கூறிய, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெய்டூர் ரொகில்சன் - இராணுவ உடையிலல்லாது சிவில் உடையிலேயே மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா வருகை தந்திருந்ததாகவும்,

பொதுவான விடயங்கள் பற்றி ஜெனரல் புறூவ் ஹொவ்டேயுடன் அவர் பேசியதாகவும் தெரிவித்தார்.

## இந்திய மீனவர் ஆதிக்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்பிரதேசத்தில் தற்போது மீன்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் இப்பிரதேசத்தில் அதிகளவில் மீன்பிடித்து வருவதால் இந்நிலை தோன்றியுள்ளது. இதனால் இப்பகுதி மீனவர்களின் நாளாந்த வருமானம் பாதிப்படைந்துள்ளது.

(15)

### விண்ணாணம் விநாசியர்



குடியிருக்கிற வீட்டில இருந்து கடல்ல செய்யிற தொழில் வரைக்கும் ஆக்கிரமிப்புத்தான் பாரும்...

## போராட்டம் முடிவுக்கு வந்தது

கடந்த சில தினங்களாக நடைபெற்றுவந்த பனந்தொழில் வல்லுநர்களின் மறியற்போராட்டம் நேற்றுடன முடிவடைந்தது.

யாழ்.மாவட்ட அரசியற் பொறுப்பாளர் இளம்பரிதி நேற்று ஒருமணிக்கு, பனந்தொழில் வல்லுநர்களைச் சந்தித்து உரையாடியதை அடுத்தே போராட்டம் முடிவுக்குவந்தது.

திக்கம் வடிசாலை மிகவிரைவில் பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியிடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தைக் குழப்ப சில தரப்புகள் முயற்சி

### கண்காணிப்புக்குழு அறிக்கை

சமாதானத்தை விரும்பாத சக்திகளும் குறுகிய லாபம் கொண்ட அரசியல் சக்திகளும் சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்புவதற்கு திட்டமிட்டுவருவதாக குற்றஞ்சாட்டியுள்ள, போர் நிறுத்தக் கண்காணிப்புக குழு, அது குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமெனக் கேட்டுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதய நிலை குறித்து கண்காணிப்புக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மக்களிடம் இந்த வேண்டுகோள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சட்டபூர்வமான வழியிலேதான் வானொலிக் கருவிகள் வந்தன

## விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கான வானொலி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதறகும் நோர்வே அரசிற்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்றும் மேற்படி உபகரணங்கள் சட்ட பூர்வமான முறையிலேயே எடுத்து வரப்பட்டன என்றும் இவ் விடயத்தினையும் நோர்வே அரசினையும் தொடர்புபடுத்துவது அபத்தமானது என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான உபகரணங்கள் தம்மிடம் ஏற்னவே உள்ளன. அவற்றிற்குரிய உபகரணங்களும் ஏனைய ஒலி பரப்புக்கு உதவும் சாதனங்களும், கருவிகளுமே எடுத்து வரப்பட்டன. இவை அனைத்தும் சட்ட பூர்வமான முறையிலேயே கொண்டுவரப்பட்டன. எந்த வகையிலும் சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்படவில்லை எனவும் விடுதலைப் புலிகள் தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

# அமெரிக்கப் படைகளுக்கு எதிராக ஆப்கானில் புனிதப் போர் ஆரம்பம்

## தலிபான், அல்கெய்டாவுடன் இணைந்து ஹெக்மத்தியார் அறிவிப்பு



(தெஹ்ரான்)

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுப்படையினருக்கு எதிராக புனிதப் போரைத் தொடங்கியிருப்பதாக ஆப்கான் போராளிக்குழுத் தலைவர் குல்புதீன் ஹெக்மத்தியார் அறிவித்துள்ளார்.

முஜாகுதீன் இயக்கத்தின் முன்னாள் தலைவரான ஹெக்மத்தியார் தற்போது தலைமறைவு வாழ்க்கை வாழந்துவரும் ஈரானிலிருந்து இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவரது இந்த அறிவிப்பு - பாகிஸ்தானிலுள்ள அவரது ஆதரவாளர்களுடாகப் பரப்பப்பட்டு வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்தபோது - அங்கிருந்து ஹெக்மத்தியார் ஈரானுக்குத் தப்பிச் சென்றார்.

அமெரிக்கா உள்ளிட்ட எந்த நாட்டுப்படைகள் ஆப்கான் மண்ணில் இருந்தாலும், அவர்களுக்கு எதிராகத் தாம் போராடி இஸ்லாமிய அரசாங்கத்தை அங்கு ஏற்படுத்தப் போவதாகவும்-

தலிபான்களுடனும், அல்கெய்டா அமைப்பினருடனும் தாம் இணைந்து போராடப்போவதாகவும் ஹெக்மத்தியாரின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கர்கள் உள்ளிட்ட 5000கும் அதிகமான வெளிநாட்டுப் படையினர், ஆப்கான் அதிபர் ஹமிட் கர்ஸாய்க்கு ஆதரவாக காபூலில் நிலைகொண்டிருப்பது தெரிந்ததே.

கடந்தவாரம் நடந்த சண்டையொன்றில் அமெரிக்கச்சிப்பாய் ஒருவர், ஆப்கானின் கிழக்குப் பகுதியில் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## ஏவுகணை எதிர்ப்புக் கருவி அமெரிக்காவிடமிருந்து பெற இஸ்ரேல் முயற்சி

(ரெல் அவிவ்)

அமெரிக்காவிடமிருந்து, ஏவுகணை எதிர்ப்புப் பொறிமுறைச் சாதனங்களைப் பெற்றுக்கொள்வதில் இஸ்ரேல் ஆர்வம் காட்டி வருகின்றது.

அண்மையில் கென்யாவில், இஸ்ரேலிய விமானமொன்றின் மீது நடாத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் - அவ்விமானம் மயிரிழையில் தப்பியதைத் தொடர்ந்து, இஸ்ரேல் ஏவுகணை எதிர்ப்புக் கருவிகளைக் கொள்வனவு செய்ய முயன்று வருகின்றது.

வொஷிங்ரனுடனான, ஏவுகணை எதிர்ப்புக் கருவிகளைக் கொள்வனவு செய்யும் உடன்பாட்டுக்கு, இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் ஒப்புதலளித்துள்ளார்.

உலகவலம்

## ராணுவம் - அபு சாயில் பிலிப்பைன்சில் மோதல்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் படையினருக்கும் அபு சாயிவ் போராளிகளுக்கும் இடையே மூண்ட புதிய சண்டையில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்சின் தெற்குப்புறத்திலான பசிலனில் இச்சண்டை நடந்தது.

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப்படும் அபு சாயிவ் போராளிகள் மீது பிலிப்பைன்ஸ் படையினர் நடாத்திவரும் தேடுதல் நடவடிக்கையின் போதே இச்சண்டை மூண்டது.

## சிறு விளம்பரம்

யாழ்ப்பாணம், பிரதான வீதி, 228ஆம் இலக்கத்தில் (பிலிப் நேசிங் ஹோம்) கட்டிடத்தில் இயங்கி வந்த வடமாகாண புற்றுநோய், எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கப் பணிமனை யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத்தெரு, 124ஆம் இலக்கக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது என்பது பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்





பெயர் :சி.வைதேகி
முகவரி:கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------------------------------

முகவரி:--------------------------------------------

பிறந்த ஆண்டு:--------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------------
பெற்றார் ஒப்பம்



ராஜா யாழ்ப்பாணம்.

எம்.ஜி.ஆர்., ராதா சலூஜா நடித்த

இதயக்கனி

10.30, 2.30, 6.30

(சி-262)



நிறைஞ்சனாஸ் சங்கானை

11.00, 2.45, 6.00 (பு.நே)

இன்று முதல்

சரத்குமார், நெப்போலியன், தேவயானி நடித்த

தென்காசிப்பட்டணம்

27.12.2002 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)மட்டும் JACKION நடித்த

SHAFT

(சி/287)



KOPAY CHRISTIAN COLLEGE

கல்லூரியை வாழ்த்துகின்றோம்

1. தென்கோவை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான திருப்பணிச சபையினரும் ஆலயக் குருக்களும்
2. இருபாலை கிழக்கு கேணிக்குளம் லிங்க விநாயகர் தேவஸ்தானம்
3. பலானை கண்ணகை அம்மன் கோயில் பரிபாலன சபை

(சி-365)


## Who are You in the Cattle Shed?

Who are you little known tiny Tot
Crawling in the cattle Shed
Babbling toddling doing miracle for the desperate
I do wonder you are from the Unknown Cot.

Feeling my pulse with a sure pill
When I am incurably ill
My fear and pain sprit away
So long as you are not away.

When the ship capsizes at midsea
You do make it knee- deep
You arm me with arrow and bow
To ensure my safe way home
If I am lost in fierce forest

In the womb and in the tomb
Man is almost all the same
On the crust of the sinners Earth
He tries to leave his colours
Not everyone is flying colours
For the Green light from the Unknown
Is miserably dim for some
The rest of my life is an oasis in the desert
For you are being Enshrined in my heart

by.N.Shadatharan
Sivan Kovilady
Madduvil North,
Chaavakacheri, Sri Lanka.

(075)


KOPAY CHRISTIAN COLLEGE

அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒத்திவைத்தல்

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 150 ஆவது ஆண்டு விழாச் சபையால் 27.12.2002 அன்று அதிஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு 07.02.2003 அன்று அதிஷ்டம் பார்க்கப்படும்.

செயலாளர்
விழாச்சபை

(சி-365)


## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### சந்தைகள், இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்காணப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளை 01.01.2003 முதல் 31.12.2003 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்படிவம் வழங்கும் இறுதித்திகதி | - 31.12.2002 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | - 31.12.2002 ந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை |
| கேள்விகள் திறக்கும் திகதி | - 31.12.2002 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை |

**விபரம்**

| சந்தைகள் | | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி (வற் நீங்கலாக) |
|---|---|---|---|
| பாசையூர் சந்தை | | 2,500/- | 40,000.00 |
| புங்கன்குளம் சந்தை | | 2,500/- | 15,000.00 |
| *இறைச்சிக் கடைகள்* | | | |
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | இல.2 | 2,500/- | 37,000.00 |
| 2. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | இல.3 | 2,500/- | 39,700.00 |
| 3. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | இல.7 | 2,500/- | 40,900.00 |
| 4. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.1 | 2,500/- | 33,300.00 |
| 5. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.2 | 2,500/- | 29,000.00 |
| 6. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.7 | 2,500/- | 9,700.00 |
| 7. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.8 | 1,500/- | 5,500.00 |
| 8. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.9 | 1,500/- | 5,500.00 |
| 9. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.11 | 1,000/- | 3,500.00 |
| 10. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 1,000/- | 3,500.00 |

கேள்வியில் சித்திபெறும் கேள்விக்காரர் அன்றைய தினமே அதன் பகுதிப் பணத்தைச் செலுத்தி உடன்படிக்கை செய்துகொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2002.12.26

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி.367)

### வடக்கு - கிழக்கு இணைந்த

# பொருளாதார ஆணைக்குழு அமைப்பிற்கு பொ.ஐ.மு, ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கென இணைந்த பொருளாதார ஆணைக்குழுவொன்றை அமைக்கும் திட்டத்துக்கு- பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

வட-கிழக்குப் பகுதிக்கான தனியான பொருளாதார ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி என்றுமே ஆதரவு வழங்காது. வடக்குக்கும் கிழக்குக்கும் தனியான பொருளாதார ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கையும் கிழக்கையும் இணைத்ததான பொருளாதார ஆணைக்குழு அமைக்கப்பட்டால், அது இவ்விருபகுதிகளையும் இணைக்கவே பயன்படும். அத்துடன், இது புலிகளிடம் சிக்கிவிடும். ஏனைய மக்களின் நலன் பாதிக்கப்படும் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்கு வசதியாகவே இரு மாகாணங்களுக்கும் பொதுவான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டதாகவும் இதில் எந்த அரசியல் உள்நோக்கமும் கிடையாது என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தொிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### வாகனங்கள் கொள்வனவு

யாழ்ப்பாண மாநகரசபை நிதியிலிருந்து, மாநகரசபைப் பாவனைக்கு என ஒருதொகுதி வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.மாநகரசபையின் கடந்த மாத பொதுக்கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (13)

### நாற்றுக்களுக்கு கிராக்கி

ஊரெழு, கரந்தன் பகுதிகளில் மிளகாய், புகையிலை, கத்தரி மற்றும் தக்காளி போன்ற நாற்றுக்களுக்கு பெரும்கிராக்கி ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியாகப் பெய்த பெரும் மழையை அடுத்து - பாதுகாக்கப்படாத பெருமளவான நாற்றுமேடைகள் அழிவடைந்துள்ளமையாலேயே இவற்றுக்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. (96)

## மீண்டும் கொழும்பு நகரில் இரட்டைத்தட்டு பஸ்கள்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் இரட்டைத்தட்டு பஸ் வண்டிகள் சேவைக்கு விடப்படவுள்ளன.

கொழும்பு நகரில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்வதற்காக இரட்டைத்தட்டு பஸ் வண்டிகளை அறிமுகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் முதல் இத்தகைய இருபது பஸ் வண்டிகள் சேவைக்கு விடப்படும்.

இதற்கென, ஏழு பஸ் கொத்தணிகள்ளக் கொள்வனவு செய்துள்ள பிரித்தானிய நிறுவனம், இருபது பஸ் வண்டிகளை அவசரமாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னர் கொழும்பில் இரட்டைத்தட்டு பஸ் வண்டிகள் சேவைக்கு விடப்பட்டிருந்த போதும், பின்னர் அவை சேவையில் இருந்து விலக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தமிழ்ப் பகுதிகளிலுள்ள

## பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு 240 கோடி ரூபா தேவையென மதிப்பீடு

(நமது நிருபர்)

இருபது வருடகால யுத்த அனாத்தங்களால் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள 950 பாடசாலைகள் சேதமடைந்திருப்பதாகவும், இவற்றை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்கு 240 கோடி ரூபா தேவைப்படுவதாகவும் மாகாணக்கல்வி அமைச்சு மேற்கொண்ட மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எட்டு மாவட்டங்களிலும் சேதமடைந்துள்ள பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்ய- 240 கோடி 13 இலட்சத்து 9 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது. இதில் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு 189 கோடி 80 இலட்சத்து ஆயிரம் ரூபாவும், மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க 23 கோடி 57 இலட்சத்து ஆயிரம் ரூபாவும், குடிநீர் விநியோகத்துக்கு 4 கோடி 13 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும், தளபாடங்களுக்காக 23 கோடி 63 இலட்சத்து இரண்டாயிரம் ரூபாவும் தேவைப்படுவதாக வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## பல்கலைக்கழகங்களுக்கு அடுத்த வருடம் அதிகளவான மாணவர்களுக்கு அனுமதி

### மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம் அறிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் நாட்டிலுள்ள 12 தேசிய பல்கலைக்கழகங்களில் 33 கற்கைநெறிகளில் பயில, 13 ஆயிரத்து 35 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இத்தொகையை அடுத்த வருடத்தில் மேலும் அதிகரிப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என்றும் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் கபீர் காசிம் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தைவிட 275 மாணவர்கள் இம்முறை அதிகமாகத் தெரிவாகியுள்ளனர். க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 5 சதவீதத்தினருக்குப் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக்கிட்டியுள்ளது.

இந்த எண்ணிக்கையை 15 ஆயிரமாக உயர்த்துவதே அரசாங்கத்தின் திட்டமாகும். ஆனால் பல்கலைக்கழகங்களில் போதிய வசதிகளின்மையால் உடனடியாக இந்த அதிகரிப்பைச் செய்யமுடியாதுள்ளது. பல்கலைக்கழகங்களின் வசதிகளை அதிகரிப்பதிலும் பல பிரச்சினைகள் உள்ளன.

எவ்வாறாயினும் இவ் வருடம் 275 மாணவர்களுக்கு மேலதிகமாக அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. 2003 / 2004ஆம் கல்வியாண்டில் இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கபீர் காசிம் மேலும் தெரிவித்தார்.

## தாய்லாந்து பேச்சுக்களில் நானே முஸ்லிம்களின் பிரதிநிதி

### என்கிறார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

தாய்லாந்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாகத் தானே கலந்து கொள்ளவுள்ளதாக, அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலை வருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் சார்பாக பிரதிநிதிகள் குழுவொன்று பேச்சுக்களுக்குச் செல்லவேண்டும் என அதாவுல்லா அணியினர் கோரிக்கை விடுத்துள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே, அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பிரதமரைச் சந்தித்துத் தான் விரைவில் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

## தேசிய அரசு அமைப்பதே இன்றைய உடனடித்தேவை

### ஏ.எச்.எம்.பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவது இன்றைய உடனடித்தேவை என, முன்னாள் அமைச்சரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தருமான ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

எல்லாக் கட்சிகளும் இணைந்த தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கப்படுவதே இன்றைய அவசியத்தேவையாகும். முன்னர் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. பின்னர் அவை கைவிடப்பட்டுவிட்டன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வட - கிழக்கு சுகாதார மேம்பாட்டுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவி!

### ஆறு கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தல் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் சுகாதார வசதியை மேம்படுத்துவதற்கு அவுஸ்ரேலிய அரசாங்கம், மனிதாபிமான அடிப்படையில் 6 கோடி 20 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்திருக்கிறது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களின் சுகாதார வசதியை மேம்படுத்துதற்காகவே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் நடந்த இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் கூட்டத்தில் அவுஸ்ரேலிய அரசாங்கம் 12 கோடி 10 லட்சம் அவுஸ்ரேலியா டொலர்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

### மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

ஸ்ரீவல்லிபுர ஆலய அறங்காவல் சபை வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு தலா 600 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

வடமராட்சிக் கல்வித் திணைக்களத்தினூடாக அடுத்த வாரம் இவ் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. (17)



ஜேர்மனியில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள் அக வணக்கம் செலுத்துவதையும் , பிரான்ஸில் மாவீரர்கள் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபிதளையும் படங்களில் காணலாம்.

# விசாரணைக்கு சமூகமளிக்குமாறு பொலிஸ் அதிகாரிக்கு அழைப்பு!

## மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்தது

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பாக வாக்கு மூலங்களைப் பதிவுசெய்ய யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதி யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இவரது வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(ச)

# கனிஷ்ட படையினர் மீதான ராகிங் மேலும் 4 படையதிகாரிகள் கைது!

(நமது நிருபர்)

முகமாலை முன்னரங்க நிலைகளில் பணிக்கு என அனுப்பப்பட்ட கனிஷ்ட படையினர் மீது ராகிங் செய்து துன்புறுத்திய சம்பவம் தொடர்பாக, மேலும் நான்கு படையதிகாரிகளைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முகமாலை முன்னரங்க நிலைகளில் இடம்பெற்ற இந்த ராகிங் நடவடிக்கைகளில் ஒரு இராணுவ கனிஷ்ட தர அதிகாரி உயிரிழந்ததுடன், மேலும் ஆறு பேர் மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் கொடிகாமம் பொலிஸார் - மேலும் நான்கு அதிகாரிகளைக் கைது செய்துள்ளனர். ஏற்கனவே 13 இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - இச் சம்பவம் தொடர்பான பூரண விசாரணைகளை நடத்துமாறு, கெமுனு காவற்படையின் பிரதம ஆணையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் கே.பி.எகொடவெலவை, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல பணித்துள்ளார். மேஜர் ஜெனரல் எகொடவெல தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், விரைவில் இது தொடர்பான அறிக்கை இராணுவத் தளபதியிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

## ஓய்வுபெற்ற பல்கலை ஊழியர்

# கொடுப்பனவுப் பிரச்சினைகள் இருந்தால் தொடர்பு கொள்ளலாம்

## - ஊழியர் சங்கம் அறிவிப்பு -

பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி சேவையை விட்டு விலகிய அல்லது ஓய்வுபெற்ற பணியாளர்கள் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைநிதி, பணிக்கொடை கொடுப்பனவுகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருப்பின் தம்மோடு தொடர்பு கொள்ளுமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

கடமை நாட்களில் காலை பத்து மணி முதல் பன்னிரண்டு மணிவரை இராமநாதன் மண்டபத்தில் அமைந்துள்ள ஊழியர்சங்கப் பணிமனையில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# ஆளுநர் விருது பெறும் எட்டுப் புலமையாளர்கள்

வடக்கு - கிழக்கு தமிழ் இலக்கிய விழாவில் எட்டு தமிழ்ப் புலமையாளர்கள் ஆளுநர் விருதைப் பெறவுள்ளனர். எதிர்வரும் 28 ஆம் திகதி இந்நிகழ்வு ஆரம்பமாகும்.

பேராதனைப் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். சிவசேகரம், பேராசிரியர் எஸ். மௌனகுரு, பேராசிரியர் சிவசாமி, நாட்டியகலைஞர் வேல் ஆனந்தன், பேராசிரியர் எம்.ஏ.நு·மான், எழுத்தாளர் சிற்பி சரவணபவன், ஒலிபரப்பாளர் ஜோர்ஜ் சந்திரசேகரன், நாட்டுப்புறவியல் கலைஞர் பாசையூர் தேவதாசன் ஆகியோரே ஆளுநர் விருதை பெறுகின்றனர்.

## திருத்தப்படாத ஊரெழு வீதி

(ஊரெழு)

ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு முன்னால் உள்ள வீதி திருத்தப்படாமையால் அப்பகுதியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

## யாழ். குடாநாட்டில்

# உலக வங்கி நிதியிலிருந்து குடிநீர், சுகாதார வசதிகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் குடிநீர் விநியோகம் மற்றும் பொதுச் சுகாதார நடவடிக்கைகளுக்கு உலகவங்கியின் நிதி உதவி பயன்படுத்தப்படவுள்ளது.

வடகிழக்குப் பகுதிக்கென உலக வங்கி அண்மையில் 31 மில் லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது.

இந்த நிதியில் யாழ்.மாவட்டத்துக்கு கணிசமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவிருக்கிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படவிருக்கும் நிதி, மேற்படி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படவிருக்கிறது. இதற்கான செயற்திட்டங்களைத் தயாரிப்பதில் யாழ்.செயலகம் ஈடுபட்டுவருகிறது.

(க)

# மக்கள் மீளக்குடியமர்த்தப்படும்வரை தொடர் போராட்டத்துக்கு ஏற்பாடு!

## வலி. வடக்கு வெகுஜன ஒன்றியம் தயாராகிறது

வலி. வடக்கு மக்கள் மீளத் தமது சொந்த இடங்களில் குடியேற அனுமதி மறுக்கப்படுவதை எதிர்த்தும், அப்பிரதேசங்களைத் தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயமாகத் தக்க வைத்திருப்பதைக் கண்டித்தும் - மக்களை மீளக்குடியேற அனுமதிக்கக்கோரியும்- தொடர்ச்சியான சாத்வீகப் போராட்டத்தை நடாத்த, வலி. வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் தயாராகிவருகின்றது.

மேற்படி போராட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதென்றும், மக்களை மீளக்குடியமர அனுமதிக்கும் வரையும் இப்போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (96)

# நெஞ்சு விட்டு நீங்காத நான்காவது ஆண்டு நினைவலைகள்



மலர்வு
பெற்றோர் மகிழ
24-01-1948

உதிர்வு
மனைவி மக்கள்
கதற
26-12-1998

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட முன்னாள் செயலாளர் நாயகமும் அனைத்துலக எம்.ஜி.ஆர்.பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும் வடபிராந்திய மினிபஸ் சங்க முன்னாள் தலைவருமாகிய

அமரர் உயர்திரு.

## பொன்னுத்துரை மதிமுகராசா (மதி)

திதி: 26-12-2002

## குடும்பத்தின் ஒளி விளக்கு

அப்பா! அப்பா! என்று கதறுகின்றோம் - உங்கள்
செவிதனில் கேட்கவில்லையா?
பாவிகளாய் இருந்து பரிதவிக்கின்றோம் அப்பா!
ஒரு கூண்டில் எம்மை விட்டு - எங்கு
தான் சென்றீர்கள் அப்பா!

நான்கு செல்வங்களையும் - உங்கள்
தெய்வத்தையும் தவிக்க விட்டுச் சென்றது ஏனப்பா!

எந்தவித பலனையும் எதிர்பாராமல் - இந்த
இனத்துக்காக தமிழ் மண்ணுக்காக
தமிழ் மொழிக்காக அல்லும் பகலும்
பாடுபட்ட ஒரு தலைவன் நீங்கள்தான் அப்பா!
அஞ்சாத நெஞ்சம், தன்மானம் உள்ளவரும்
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கு அப்பா!

உப்பைப்போல் எளிமையும்
கற்கண்டைப்போல் இனிமையும் ஆனவர் நீங்கள்
- அப்பா!

களம் பல கண்டு
சிறைபல சென்று சொல்லொணாத்துன்பம்
அனுபவித்த தியாகி நீங்கள் அப்பா!
பல ஆண்டுகால பொதுவாழ்வுக்கு
சொந்தக்காரர் நீங்கள் அப்பா!

நேற்றுப்பெய்த மழையில் - இன்று
முளைத்த காளான்கள் அல்ல.
நெருப்பாற்றில் நீந்திவந்த
மெழுகுவர்த்தி நீங்கள் அப்பா!
நீங்கள் திடீர் அரசியல்வாதியில்லை அப்பா!

தன்குடும்பத்தையும் தன்னையும் கவனியாது
மக்கள் வாழ்வு மலர வேண்டும் - என்பதற்காகத்
தானே பணிகளைச் செய்தீர்கள் அப்பா!

கடமை முடியவில்லை அப்பா!
காலன் உங்களை அழைத்துவிட்டான் இல்லை
கணக்கை முடித்து விட்டான் அப்பா! அப்பா!!

"தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

"நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும்
அங்கே தீமைகள் நுழைந்து விடக்கூடாது"
- எம்.ஜி.ஆர்

"கடல் நீர் ஏன் உப்பானது கடல் கடந்து
வாழ்கின்ற தமிழர்கள் வடிக்கின்ற கண்ணீரால்"
- பேரறிஞர் அண்ணா

நல்லவர்கள் வாழ்வதில்லை
இது நானிலத்தின் தீர்ப்பு!

" அணைந்து விட்ட எங்கள் குலவிளக்கை இன்னும் நினைப்போம்" என்று வானத்து சந்திரனே இவ்வையகத்தில் உலாவிய எம் மாசற்ற அப்பாவை எப்போ காண்போம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஈழமண்ணிலிருந்து வணங்குகின்றோம்.
உங்கள் பணி தொடரும்....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி:
மதிமுகராசா விஜயலட்சுமி
மகள்மார்:
விஜயமதி, கஸ்தூரிமதி
மகன்மார்:
விஜயகாந்த் (விஜய்)
(அனைத்துலக எம்.ஜி.ஆர். இளைஞர் அணித்தலைவர்)
விஜயவர்மன் (வர்மன்)
(உரிமையாளர் விஜய் வீடியோ சென்ரர்)

ஸ்ரீமுருக பவனம்,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

*விஜய் வீடியோ சென்ரர்,*
*போட்டோ அன் வீடியோ,*
*தாவடி,*
*கொக்குவில்.*




# தம் முன்னேற்றத்திற்கு தாங்களே தடைக்கற்களா?

**பிள்ளைகளின் எதிர்காலப் பாதுகாப்புக்கான சேமிப்பு மட்டம் ஒவ்வொரு மகளிரிடத்திலும் இருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும்.**

**பெண்கள் மற்றும் விதவைகளின் நலன்களை வங்கிக் கடன் திட்டங்களூடாக நிறுவனமயப்படுத்தி பேணிப்பாதுகாக்க ஒவ்வொரு கிராமியப் பொதுஅமைப்புக்களும் முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார், மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்.**



**கேள்வி: வங்கியில் சேமிப்பதைவிட சீட்டுப் பிடிப்பதில் ஆர்வம் காட்டுபவர்களைப் பற்றி...?**

பதில்: கிராமிய மட்டங்களாயினும் சரி, வர்த்தகர்களாக இருந்தாலும் சரி – இந்தச் சீட்டுப் பிடிப்பதில் காட்டுகின்ற அளவு ஆர்வம், வங்கியில் பணத்தை வைப்பிலிடுவதில் காட்டுவதில்லை. அதற்குச் சில காரணங்கள் இருக்கலாம்.

வங்கியில் கடன் பெற்றால் மட்டும்தான் நாங்கள் அவர்களுக்குக் கடனை மீளச்செலுத்தும்படியான அழுத்தங்களைக் கொடுப்போம். ஆனால் சேமிக்க வேண்டும் என்று நாங்கள் கட்டாயப்படுத்த முடியாது. மாதாந்தம் சேமிக்க வேண்டிய கணக்குகள் இருக்கின்றன. அந்தக் கணக்குகளை ஆரம்பித்தால்கூட நாங்கள் கேட்பதில்லை. ஆனால் சீட்டுப்பிடித்தால் கட்டாயமாக அந்த மாதத்திற்குரிய பணத்தைச் செலுத்தியே ஆகவேண்டும். அந்தக் காசு கொடுக்கப்படாவிட்டால் சீட்டுப்பிடிப்பவர் வீடு தேடிப் போய்க் காசு வாங்குவார். அதனாலும் சிலபேர் சீட்டுப் பிடிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஆனாலும் இந்த மாதிரிச் சீட்டுக்களை ஆரம்பித்து அதனாலே ஏமாற்றப்படுபவர்களையும் நஷ்டமடைந்தவர்களையும் நாங்கள் காண்கிறோம். முக்கியமாக, இங்கு போர்க்கால இடப்பெயர்வுகள் ஏற்பட்டபோதுகூட கட்டிய பணத்தை மீளப்பெறமுடியாத நிலைக்குக்கூடத் தள்ளப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இவ்வாறான பணத்தை அவர்கள் வங்கியில் சேமித்தால் அந்தப் பணத்திற்கு நம்பிக்கையும் உத்தரவாதமும் இருக்கும். வட்டியுடன் மீளப்பெறவும் முடியும்.

**கேள்வி: பிள்ளைகளின் எதிர்காலப் பாதுகாப்பிற்கு மகளிரின் சேமிப்பு மட்டங்கள் எவ்வாறிருக்க வேண்டும்?**

பதில்: ஒரு குழந்தை பிறந்த உடனேயே சேமிக்கத் தொடங்குகிற பழக்கத்தைப் பெண்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பெண்களுக்கு, தங்கள் பிள்ளைகளுடைய எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அவர்களுக்காக ஒரு சிறிய தொகையைச் சேமிக்கத் தொடங்கினால் நன்று. இதற்காக மக்கள் வங்கியில் "குழந்தைகள் மலர்ச்சிக் கணக்கு" ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தக் கணக்கில் 100 ரூபா ஆரம்பத்தில் இட்டுப் பின்னர் மாதாந்தம் சிறு தொகை வைப்பிலிட்டால் அது வளரும். அதன் பின்னர் அப்பிள்ளை பாடசாலைக்குச் செல்லத் தொடங்க, அது, மாணவர் மலர்ச்சிக் கணக்காக மாற்றப்படுகின்றது. பின்னர் அந்தப் பிள்ளையின் கற்றல் செயற்பாட்டுக்குப் பணம் தேவைப்பட்டால் அக்கணக்கில் இருந்து உதவி செய்ய வங்கி அனுமதி கொடுக்கும். 18 வயதின் பின்னர்தான் அந்தப் பணத்தை மீளப்பெறலாம். ஆனபடியால் சேமிப்பதில் பயன் இல்லையென்று சிலர் நினைக்கிறார்கள்.

ஆனாலும், இப்படியாகச் சேமிக்கப்பட்ட பணத்தினைப் பெற்றோர்கள் சில தேவைகளுக்காகப் பெறவருவது கவலை தருகிறது. அதிலும் குறிப்பாகப் பூப்புனித நீராட்டு விழாவிற்குச் செலவழிப்பதற்காகவே சில பெற்றோர்கள் பணத்தை மீளப் பெறுகிறார்கள். சில சமயங்களில் அவர்களுக்கு அறிவுரை கூறியும் இருக்கிறேன். எனவே இத்தகைய ஆடம்பரச் செலவுக்காகப் பணத்தை மீளவும் பெறுகின்ற நடைமுறையில் இருநது சமுதாயம் திருந்த வேண்டும்.

**கேள்வி:- மகளிருக்காக வங்கியால் அறிமுகப்ப டுத்தப்பட்டிருக்கும் கணக்குகளின் நடைமுறைகள் பற்றி...?**

பதில்:- மகளிருக்கென "மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு" இருக்கிறது. 500 ரூபாவுடன் இக்கணக்கை ஆரம்பித்தால், பின்னர் மாதாந்தம் கிடைக்கும் பணத்தை இதில் வைப்புச் செய்யலாம். ஒக்டோபர் 1 ஆம் திகதி தொடங்கினால் டிசம்பர் 31 ஆம் திகதி மட்டும் 7500 ரூபா இருந்தால் அந்தக் கணக்கு சேமிப்பு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும். அதன் பரிசுகள் மார்ச 8 ஆம் திகதி மகளிர் தினத்தன்று வங்கியில் வைத்து வழங்கப்படும்.

இதைவிட இக்கணக்கு வைத்திருப்பவர்களுக்குக் கடன் வசதிகள் அதாவது, கடன் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பலருடைய எதிர்பார்ப்புக்கள் என்னவென்றால், இதில் ஒரு கணக்கை ஆரம்பித்துக் கடனைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுதான். ஆனால், உண்மையில் வங்கி, கடன் பெறுபவர்களிடம் இருந்து சிலவற்றை எதிர்பார்க்கிறது.

கடன் பெறுபவர்கள் இந்தப் பணத்தை எதற்கு உபயோகிக்கப் போகின்றார்கள். அதாவது குடும்பத்தின், நாட்டின் முன்னேற்றத்திற்காக அதனைப் பயன்படுத்துவதையே வங்கி விரும்புகிறது. மீண்டும் – பயன்படுத்தப்பட்ட விடயத்தில் இருந்து அதாவது சுயதொழிலில் இருந்து கடனுக்கான ஒதுக்கங்களைக் கட்ட வேண்டும். வீடு கட்டுபவர்களுக்கும் இக்கடன் வழங்கப்படும்.

**கேள்வி:- பெண்கள் விதவைகள் முன்னேறுவதற்கு எப்படியான வங்கி நடைமுறைகளைக் கைக்கொள்ளலாம்?**

பதில்:- சுயதொழில் முயற்சிக்கான கடன்களைத் தனியாக எடுத்துக் கொள்பவர்கள், தங்களுடைய வேலை வாய்ப்பிற்காக அதைப் பயன்படுத்துகிறார்களா? என்பது ஒரு கேள்விக்குரிய விடயமே. தங்களுடைய தேவையற்ற செலவுகளுக்கும் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆகவே, இதனையொரு மகளிர் அமைப்பு அல்லது கிராம முன்னேற்றச் சங்கம் மூலமாக, இப்படியான ஒரு கடனைப் பெற்று அமைப்பு ரீதியாகச் செயற்பட்டால் அதன் மூலமாகப் பெண்கள் கூடிய அளவான நன்மை பெறுவதோடு, பலர் வேலைவாய்ப்புக்களையும் பெற வாய்ப்புக்கள் இருக்கிறது. ஆனால், அப்படி எந்த அமைப்புக்களும் இவற்றைப் பெற்றுக்கொள்ள முன்வரவில்லை.

இவ்வாறு கடன்பெற முன்வருகின்ற சங்கங்கள், வங்கியின் வாடிக்கையாளர்களாக இருக்வேண்டியது முக்கியமான ஒரு விடயம். இவ்வாறான அமைப்பு ரீதியாகக் கடன் பெறவருவோர் தம்முள் ஒரு குழுவை நியமித்து, அவர்கள் வந்துதான் இக்கடனைப் பெறமுடியும். பின்னர் அவற்றை மாதாந்தம் சுயதொழில்முயற்சி மூலம் கிடைக்கின்ற வருமானத்திலிருந்து கட்டவேண்டும்.

உண்மையில் இப்படியான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு, நிறுவன மயப்படுத்தப்பட்ட முறையில், ஒரு முயற்சி ஆரம்பிக்கப்பட்டால், அதனூடாக விதவைகள் மற்றும் பெண்கள் முன்னேறுவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றுதான் கூறவேண்டும்.

**கேள்வி:- வங்கித்துறையில் பெண்களின் பங்களிப்பு, மற்றும் முகாமை பற்றிய செயற்பாடுகள்...**

பதில்:- வங்கித்துறையைப் பொறுத்தளவில் முன்பு பெண்கள் பணியாற்றிய வீதம் குறைவாகவே இருந்தது. ஆனால் இப்பொழுது பெரும்பாலும் பெண்கள்தான் வங்கியில் பணிபுரிகின்றார்கள். 1972 ஆம் ஆண்டு, நான் வங்கியில் சேர்ந்தபோது, நான் மட்டும்தான் ஒரு பெண் ஊழியராக இருந்தேன். ஆனால் இப்போது எமது வங்கியில் கூட 80 வீதமான பணியாளர்களாகப் பெண்களே இருக்கின்றார்கள். இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் முகாமையை ஏற்பதில்கூட அதிகமான பெண்கள் பயிற்றப்பட்டு விடுவார்கள். ஆனால் எப்பொழுதும் நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புவது, பெண்களும் சரி, ஆண்களும் சரி திருமணம் என்ற ஒன்று முடிந்தவுடன் – குறிப்பாகப் பெண்கள் அப்படியொரு நிலைக்கு வந்துவிட்டால், பின்னர் அவர்கள் தொழில் ரீதியாக உயர்பதவிகளுக்குச் செல்வதில் சிறிது தடங்கல் ஏற்படுகின்றது.

இதற்கு வீட்டில் வேலை, அலுவலகத்தில் வேலை என்ற மாதிரி 'இரட்டைச்சுமை' காரணமாக இருக்குமோ? என்றும் எண்ணத் தோன்றுகின்றது. இல்லாது விட்டால் அவர்களுக்கு ஒத்துழைப்பு குறைவாக, அல்லது கிடைக்காமல் இருக்கின்றதோ தெரியாது.

எமது சமுதாயத்தின் சில பண்புகள் எங்களை அதிலேயே ஊற வைத்து சிலவற்றைச் செய்யமுடியாத அளவிற்குக் கொண்டு வந்து விடும். உதாரணமாக ஒரு பெண் ஊழியர் திருமணமாக முன்னர் தனியாக வேலைக்கு வந்து சென்றால், திருமணத்தின் பின்னர் கணவருடன் வேலைக்கு வந்து செல்வது – குறிப்பாக வாகனத்தில் தனியாக வந்து செல்வதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் தாங்கள் தனித்துநின்று இயங்க முடியும் என்கிற தன்மையை இழந்து விட்டார்களா என்று நினைப்பது உண்டு.

அதேபோன்று காலச்சூழ்நிலையால் தங்கள் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். பெண்கள் படித்து முன்னேறித் தொழில்பார்க்க வந்தாலும் சில பெண்கள் மாறுவதில்லை. தனிதது துணிந்து செல்லும் தன்மை இல்லை. இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்துதான் செல்வார்கள்.

தாங்கள் செய்யும் வேலை கஷ்டமானது என்று கூறுவதுண்டு. சில சந்தர்ப்பங்களில் நான்கூட அவ்வாறு கூறியிருக்கின்றேன். உதாரணமாக எமது பல்கலைக்கழகக் கிளையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவை காசோலைகளை மாற்றச் செல்ல வேண்டி இருக்கிறது. அதற்கு எமது கிளையில் உள்ள எல்லாப் பெண் ஊழியர்களும் தயங்குகிறார்கள். இதற்காக ஒரு ஆண் ஊழியரைத் தேடவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ஆனால், இதே வேலையை யாழ். நகரிலுள்ள வங்கிகளில் உள்ள பெண் ஊழியர்கள் செய்கிறார்கள். இவர்கள் தமக்குத் தூரம் கூடிவிட்டது என்று கூறுகிறார்கள் இது அவர்களின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாகவே இருக்கிறது. உயர்பதவிக்கு பெண்கள் செல்வதும் குறைவாகவே இருக்கிறது. இது உண்மையில் ஆராயப் படவேண்டிய ஒன்று. சில இடங்களில் பெண் என்ற காரணத்திற்காகப் பெண்கள் விலக்கப்பட்டு, சில பதவிகளில் ஆண்கள் அமர்த்தப்படுவதும் நடைபெறுகிறது.

**நேர்காணல் - உஷா, கலாநந்தி.**

## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






சிந்தி,

மலரவிருக்கும் புத்தாண்டு எமது செயற்றிறனை வளர்த்து நம்மை முன்னேற்றும் ஆண்டாக விளங்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போம்.

உங்கள் கிராம மகளிர அபிவிருத்தி நிலையத் தலைவி சுகுமாரியின் கணவர், அவளது செயல்கள் காரணமாக அதிருப்தியடைந்திருப்பதாகப் பலரும் பேசிக்கொள்வதாக எழுதியிருந்தாய். சுகுமாரி வீட்டில் அவரது வேலைகளைக் கவனிப்பதில்லையென்றும், உணவு வேளையில் அருகிலிருந்து பரிமாறுவது கூட இல்லையென்றும் அவர் கவலைப்படுவதாக உனக்கு யார் கூறினார்கள்?

முதலில் உனக்கு இதைக் கூறியவரிடம் அவருக்கு யார் கூறியது என விசாரித்து, அதை முதன் முதலிலே கூறியவரைக் கண்டுபிடித்தாயானால் நீ திறமைசாலிதான். கண்டுபிடித்தால் சிலசமயம் சுகுமாரியின் கணவர் அப்படியேதும் கூறாமலேயே அக்கதை உருவாகியுள்ளதென நீ கண்டுபிடிக்கவும் நேரலாம்.

சுகுமாரியின் வீட்டிற்குச் சென்று நேரிலேயே அவருடன் உரையாடினால், அவர் சுகுமாரிக்கு மிகவும் உதவி புரிந்து ஊக்கமளிப்பவராக இருப்பதைக் கூட நீ காண நேரலாம்.

யாராவது வேடிக்கையாகக் கூறியதும் இப்படிக் கதையாகி இருக்கலாம். அல்லது சுகுமாரியினதோ, சங்கத்தினதோ முன்னேற்றத்தைத் தடை செய்யவும் இவ்வதந்தி பரப்பப்பட்டிருக்கலாம்.

ஒரு வீட்டில் மனைவி செய்ய வேண்டிய வேலைகளென்று சிலவற்றை வகுத்து வைத்திருக்கிறார்கள். பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்றும் கற்பனை செய்து வைத்திருக்கிறார்கள். ஆம், அது கற்பனைதான். அவர்கள் கூறும் அத்தனை குணாம்சங்களும் பொருந்திய பெண்ணை நேரில் சந்திக்க முடியாது. கதைகளிலும், காவியங்களிலும், நாடகங்களிலும், சினிமாவிலுமே காணலாம்.

இத்தகைய அசாதாரணமானவர்களாக அனைத்துப் பெண்களும் இருக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறார்கள். இது சாத்தியமா?

இதே கற்பனைகளில் வரும் ஆண்கள்கூட மிகச் சிறந்தவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். அப்படித் தாமும் வாழ வேண்டுமென ஆண்கள் நினைப்பதில்லை. ஆனால் பெண்கள் மட்டும் பொறுமையின் இலக்கணமாக, தியாகத்தின் சின்னமாக எப்படியெல்லாமோ இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

பொறுமை, தியாகம், புரிந்துணர்வு ஆகிய எல்லா நற்பண்புகளும் நமக்கு இருக்க வேண்டியது அவசியமே. நமக்கு என்றால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்றுதான் கூறவருகிறேன்.

ஆண் தேசசேவை செய்தால் மனைவி ஒத்துழைக்க வேண்டும். பெண் கிராமத்திற்குச் சேவை செய்தால் கணவன் ஒத்துழைக்க வேண்டும்.

சுகுமாரியின் கணவரைச் சந்திக்க முயற்சி செய். அவர் உண்மையாகவே மனைவி தனக்கு மட்டும் சேவகியாக இருக்க வேண்டுமென்று கருதுபவராக இருந்தால், அவரோடு உரையாடி மனதை மாற்ற முயற்சி செய். என்ன நடந்ததென்று அறிய உன் அடுத்த கடிதத்தை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

யோசி

## வீட்டுக் குறிப்புகள் சில

- சமயலறை அலுமாரிகளில் ஆங்காங்கே பாக்கு தூவி வையுங்கள். கரப்பான் பூச்சிகள் அண்டாமல் இருக்கும்.
- கிழங்கு வகைகளை வேகவைத்ததும் ஆறவைத்து, சிறிது நேரத்தின் பின் குளிர்சாதனப்பெட்டியில் வைத்து விடுங்கள். பிறகு எண்ணெயில் பொரித்தால் அதிக மொரமொரப்பாகவும் சுவையாகவும் இருக்கும்.
- வெண்டைக்காய் சமைக்கும் போது அதில் சிறிதளவு எலுமிச்சம் பழச்சாற்றைக் கலக்கவும், வெண்டைக்காய் தாச்சியில் ஒட்டாமல் வரும். அதேபோல தயிர் சேர்த்தாலும் வெண்டைக்காயின் வழுவழுப்பு நீங்கும்.
- சப்பாத்திக்கு மாவு பிசையும் போது வெதுவெதுப்பான தண்ணீரில் சில துளிகள் எண்ணெய் விட்டு, பின்னர் மாவைப் போட்டுப் பிசைந்து சப்பாத்தி செய்தால் அதிக மென்மையாக இருக்கும்.

# அழகுக் குறிப்புகள்

## "தலையில் குடுமி வைப்பதன் சிறப்பு"

ஆதிகாலத்தில் எண்ணெய் இன்றிப் பறட்டைத்தலையாய் திரி சடையாய் திரிந்த மனித இனம், நாகரிகம் வளர, வளர - தங்கள் தலைமயிரின் அலங் காரங்களையும் காலத்துக் குக்காலம் மாற்றி, மாற்றி அழகுபடுத்தியது. ஆண்களும் பெண்களும் தங்கள் தலைமயிரை நீளமாக வளர்க்க அரும்பாடுபட்டார்கள்.





ஒருவன் முதுமைக் கோலம் அடைவதைச் கூட இந்தத் தலைமயிா நரைப்பது, அதனை எடுத்துக் காட்டுகிறது. ஒருவருக்கு இந்தத் தலைமயிர் இல்லாவிட்டால் மிகவும் அவலட்சணமுள்ளவர்களாகக் காட்சியளிப்பார்கள்.

பெண்களின் அழகுக்கு அழகாய் அவர்களை அழகுபடுத்துவதும் இந்தத் தலைமயிரே. ஒரு பெண் அழகு குறைந்து காணப்பட்டாலும், அவளின் தலைமயிர் அழகாக, அடர்த்தியாக வளர்ந்திருந்தால் அது அவளுக்கு ஒரு அழகாய் விளங்கி அவளை நன்கு வாழ வைக்கிறது.

இந்தத் தலைமயிரைக் கொண்டு ஆடவரும் பெண்டிரும் அந்தக் காலங்களில் குடுமி வைத்தே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் காலஞ் செல்லச் செல்ல வெளிநாட்டு நாகரிகங்கள் எம் இனத்தவரிடையே புகுந்தபோது ஆடவர்கள் முற்றாக குடுமி போடுவதைத் தவிர்த்து தமது கேசத்தைக் குறைத்து நாகரிகமான அலங்காரங்களை செய்து கொள் கிறார்கள். அந்தக் காலங்களில், ஆண்கள் கட்டாயமாக குடுமி கட்டும் பழக்கம் தமிழரின் பண்பாடாக இருந்து வந்தது. ஆனால், இக்காலத்தில் அவையும் நலிவுற்று, அந்தணக் குருக்கள்மார்கள் மத்தியில்தான் இக்குடுமி வைக்கும் பழக்கம் இன்றும் ஒரு கட்டாய பண்பாடாக நிலவி வருகிறது.

இன்று பெண்களிடையே மிகவும் அலங்கோலமான தலையலங்காரங்கள் புகுந்து பெண்ணினத்தின் அழகை குறைக்கும் அளவிற்கு நிலவி வருகிறது.

ஒரு பெண்ணின் அழகின் கூடிய பகுதி அவள் தலையலங்காரத்திலேயே தங்கி உள்ளது. ஆனால், ஆணும் பெண்ணும் குடுமி வைப்பதன் காரணம் தெரிந்து கொண்டால் அதன்படி சிறப்பாக ஒழுகுவார்கள்.

எமது தலையில் உள்ள மண்டையோட்டின் உட்புறத்தில் எத்தனையோ பாதுகாப்பிற்கு மத்தியில் எமது உடம்பின் பிரதான பகுதியான மூளை பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மூளையில் மூளையம், மூளி என்ற பகுதிகளும் இருக்கின்றன.

இந்த மூளியானது மூளையத்தின் பின்னால் உள்ள ஒரு சிறுபகுதி. (மூளி- cerebellum) எமது சுவாசத்தையும், இதயத் துடிப்பையும் ஆள்கிறது. உடலின் பல்வேறு பகுதிகளின் இயக்கத்திற்கு பங்கு கொள்ளும் தசைகளின் இயக்கத்தை ஒருங்கிசைத்து அதற்கதற்கு ஏற்றவாறு இசைவுபடுத்துகிறது.




இப்படியான அரும்பெரும் ஆற்றல் வாய்ந்த மர்மஸ்தானமாகிய மூளியைப் பாதுகாக்கவே, ஆன்றோர்கள் குடுமி வைத்துக் கொண்டார்கள். ஆகவே அறிவியல் அடிப்படையில் எம்மை தலையிடி, கண் பார்வைக்குறைவு, மலச்சிக்கல், யோசனை ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கத் தோன்றியதே குடுமியாகும். எங்கள் தலைமயிரை, சிகைக்காய், அரப்பு, தேசிக்காய் முதலிய இயற்கை வளங்களால் சுத்தி செய்து, நல்ல இயற்கை மூலிகைகள் சேர்ந்த நறுமணத் தைலங்களைப் பூசி, குடுமி கட்டி (எந்த வகையில் என்றாலும் சரி) நறுமணம் கமழும் பூக்களைச் சூடி அலங்கரித்து அழகுள்ளவர்களாகவும், ஆரோக்கியமுள்ளவர்களாகவும் வாழலாம்.



**லிங்கா இராஜநாயகம்**

## நீங்கள் உயரமாக வளர வேண்டுமா?

சில பெண்கள் தாம் கட்டையாக இருக்கின்றோம் என்று அடிக்கடி கவலைப்படுவதுண்டு. கவலைப்பட்டால் உடல்நலம்தான் பாதிக்கப்படுமே தவிர, வேறு எந்த விளைவும் ஏற்படப்போவதில்லை.

இயற்கை அளிக்காத உயரத்தை உங்களது சொந்த முயற்சியால் செயற்கையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

தசைநார்களுக்குத் தகுந்த பயிற்சி மூலம் பலம்பெறச் செய்ய வேண்டும்.

உணவை முறையாக உட்கொள்ள வேண்டும். நான்றாக மென்று சாப்பிடவேண்டும். சாப்பிடும்போது இடையிடையே தண்ணீர் பருக வேண்டாம். சந்தோஷமான மனதுடன் மிகவும் நிதானமாக உணவை உட்கொள்ள வேண்டும்.

கைகளையும் கால்களையும் மடக்கிப்படுக்கக்கூடாது. தாராளமான பரப்பில் படுத்துறங்க வேண்டும்.

வளர்ச்சி குறைந்தவர்கள் காலை நேரத்து வெயில் தங்கள் மேல் படாமல் தவிர்ப்பது நல்லது. ஆனால் மாலை நேரத்து இளம் வெயில் இப்படிப்பட்டவர்களுக்கு நல்லது. உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் சத்தான உணவை அளவுடன், நேரத்துடன் சாப்பிடவேண்டும்.

எப்போதும் சுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டும்.

உடலை எப்போதும் நேரான நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இறுக்கமான ஆடைகளை அணியக்கூடாது.

இரவில் 7 மணிநேரமும் பகலில் ஒரு மணி அல்லது இரண்டு மணிநேரமும் தூங்குவது தவிர்க்க முடியாது.

## மரக்கறி கட்லெட்

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| உருளைக்கிழங்கு | ~ | 1/4 Kg |
| வாழைக்காய் | ~ | 1 |
| கரட் | ~ | 100 g |
| வெங்காயம் | ~ | 25 g |
| பச்சைமிளகாய் | ~ | 25 g |
| கருவேப்பிலை | ~ | சிறிதளவு |
| உள்ளி | ~ | 1 |
| கடுகு | ~ | சிறிதளவு |
| சீரகம் | ~ | சிறிதளவு |
| மிளகு தூள் | ~ | 1 மேசைக்கரண்டி |
| உப்புத்தூள் | ~ | அளவாக |
| தே.எண்ணெய் | ~ | 1/4 போத்தல் |
| மா | ~ | 100 g |
| ரஸ்க் தூள் | ~ | 50 g |



*செய்முறை:-*

உருளைக்கிழங்கு, வாழைக்காய், என்பவற்றை நீரில் இட்டு நன்கு அவிக்கவும். அவித்த பின் அவற்றின் தோலை உரிக்கவும். கரட்டை உரஞ்சி ஒரு பாத்திரத்தில் இடவும். வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை என்பவற்றை துப்பரவு செய்து சிறுசிறு துண்டுகளாக வெட்டவும். பின்னர் அவித்த உருளைக்கிழங்கு, வாழைக்காய் என்பவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு நன்கு மசிக்கவும். மசிக்கும்போது கரட்டையும் சேர்த்து பிசையவும். அதன் பின் வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய் என்பவற்றை சிறிது எண்ணெய் விட்டு அரைவாசி வதக்கவும். அதற்குள் பிசைந்த உருளைக் கிழங்கு என்பவற்றை போட்டு பின் கிளறிய பின் அளவான சிறு உருண்டைகளாக உருட்டிக் கரைத்த கோதுமை மாவிற்குள் தோய்த்து, ரக்ஸ் தூளினுள் உருட்டிக் கொதி எண்ணெயில் இட்டுப் பொரிக்கவும். பொரிந்து பொன்னிறமாக வந்ததும் எடுத்துப் பரிமாறலாம். கட்லெட் தனியாகவும் சாப்பிடலாம் - சோற்றுடனும் சேர்த்துச் சாப்பிடலாம்.

# தக்காளிப்பழம்...



எமது உடலுக்கு காய்கறிகள், பழங்கள் நல்ல ஊட்டச் சத்துக்களை வழங்குகின்றன. அதனால் நாம் கட்டாயம் அவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். எதில் என்ன சத்து இருக்கின்றது? எதை சாப்பிட்டால் என்ன நன்மை? எப்படிப் பார்த்து வாங்குவது? எவ்வாறு பயன்படுத்து வது? இதுபோன்ற விடயங்களை அறிந்து கொள்ளவேண்டும். தக்காளிப்பழத்தின் பயன்களையும், உபயோகிக்கும் முறைகள், அதன் வரலாறு போன்றவற்றைப் பார்ப்போம்.

தக்காளி காயா? பழமா? என்ற பிரச்சினை 18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் பெரிய பிரச்சினையாக எழுந்தது. அப்போது அங்கு பழங்களுக்கும் காய் களுக்கும் தனித்தனி வரி அறவிடப்பட் டது. காயா, பழமா என்ற குழப்பத்தால் எந்த வரி போடுவது என்று தெரியாமல் அரசு தடுமாறியது. விவசாயிகள், வியாபாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டனர். நீதிமன்றத்தில் தக்காளி படாதபாடுபட்டது. தக்காளி காய் வகை என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டதும், மக்கள் நிம்மதியானார்கள். இதன் வெளித்தோற்றம் பழவகையைச் சேர்ந்தது. உள் அமைப்பு உருளை, கத்தரி, பச்சை மிளகாய் குடும்பத்தைச் சேர்ந் தது எனக் கூறப்பட்டது.

தக்காளியின் வரலாற்றைப் பார்க்கும்போது தாய்மண் தென்அமெரிக்கா. நிறத்தினைப்பார்த்து விஷம் என்று பயந்து ஒதுக்கி வைத்தனர். பின்னர் பச்சைச் செடியில் குண்டுகுண்டாக பழுத்துத் தொங்கும் அதன் அழகைப் பார்த்து அலங்காரப் பொருளாக வீட்டுக்குள் எடுத்துச் சென்றார்கள். மெதுவாகப் பயம் விலகியது. விஷம் இல்லாமல் போகட்டும் என்று நீண்டநேரம் நெருப்பில் வாட்டுவார்களாம். 200 ஆண்டுகளாகத்தான் தக்காளி பாவனைக்கு வந்தது.

இதன் சிறப்பம்சமாக பருப்பு, சாம்பார், ரசம், மரக்கறி உணவு, ஜாம், யூஸ் போன்ற எதனோடும் இது சேர்த்தாலும் அந்த உணவுக்கு அதிக சுவையும், நிறமும் வந்துசேரும். இதனால் இது விரைவில் பிரபலமாகி விட்டது. ஊட்டச்சத்து என்று சொல்லிக் கொள்ள ஒன்றுமில்லை. நோய் தடுக்கும் விற்றமின் C இதில் நிறைய உண்டு. இதனைப் பழமாகச் சாப்பிடும்போது உடலில் விற்றமின் A யாக மாற்றிக் கொள்கிறது. இது கண்பார்வைக்கு நல்லது. இதனைக் கொதிக்க வைத்த நீரில் போட்டு சோஸ்போல் செய்து பயன்படுத்தும்போது சத்து அதிகமாகக் கிடைக்கின்றது.

இது ஆயிரக்கணக்கான வகைகளில் காணப்படுகின்றது. முக்கியமானதாக மூன்று வகைகள் உண்டு. அவற்றில் ஒன்று நெல்லிக்காய் வடிவத்தில் காணப்படும். இதை சாலட்டில் அலங்காரமாகப் பயன்படுத்தலாம். இது மஞ்சள் நிறத்திலும் உண்டு. மற்றயது நீளமாகச் சின்னஞ்சிறிய காய்களாக இருக்கும். சதைப்பிடிப்புடையதாக சாறு கூடுதலாக இருக்கும். விரைவில் நசியாத தன்மையுடையது. விரைவில் அழுகாது. இன்று நாம் அதிகம் பயன் படுத்துவது இந்த வகையைத்தான். மூன்றாவது வகையைச் சேர்ந்தது ஜாம் செய்ய உகந்தது. இது உருண்டை வடிவில் காணப்படும். தோல் மெல்லியதாக இருக்கும். இதனை நாட்டுத்தக்காளி என்பார்கள். இதில் சாறு அதிகம் என்பதால் விரைவில் அழுகிவிடும். பழச்சாறு, ஷாண்ட்விச் போன்றவை செய்யலாம்.

வெளிநாட்டில் அதிகமாகப் பயன்படுத்துவது உலர் தக்காளி ஆகும். துண்டு துண்டாக்கி வெயிலில் காயவைத்துப் பதப்படுத்துவார்கள். நாட்கள் சென்றாலும் பழுதாகாமல் இருக்கும். இவ்வாறு பதப்படுத்திய தக்காளியை வெந்நீரில் ஊறவைத்து சமையலுக்கு உபயோகிப்பார்கள்.

### நல்ல தக்காளியை எப்படி பார்த்து வாங்குவது.

❖ குளிர்சாதனப்பெட்டியில் வைத்திருந்ததை வாங்கக்கூடாது. ஒரு முறை குளிர்ந்து விட்டால் மறுபடியும் பழுக்காது.

❖ உருண்டை வடிவானதை வாங்குங்கள். தோல்மீது வெடிப்பு, துவாரம் இருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பின் அப்பழங்கள் நல்லதாக இருக்காது. காம்பில் சிறு வெடிப்பு இருந்தால் தவறில்லை.

❖ கொஞ்சம் பச்சை நிறமுடையதாக வாங்கிக் கூடையில் வைத்துப் பழுக்க வைக்கலாம். பழுக்குமுன் குளிர்சாதனப்பெட்டியில் வைக்கவேண்டாம்.

❖ தொட்டுப்பார்க்கும்போது மிருதுவாக லேசாக அமுக்கிப் பார்க்கும் போது அமுக்கப்படவேண்டும்.

### பாதுகாக்கும் முறை

❖ குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவேண்டாம். காற்றோட்டமான கூடையில் வைக்கலாம்.

❖ காம்புகள் மேல்நோக்கி இருப்பதுபோல் வைத்தால் அடிபடாது.

❖ விரைவில் பழுக்க வேண்டுமா? ஒரு கடதாசிப்பையில் வாழைப் பழம் அல்லது அப்பிளுடன் சேர்த்து வைக்கவும். அதில்வரும் எதிலீன் வாயுவால் இது விரைவாகப் பழுக்கும்.

❖ வெயிற்படும் இடத்தில் வைக்காதீர்கள்.

❖ பழுத்தவுடன் உடனே பயன்படுத்தாவிட்டால் குளிர்சாதனப்பெட்டியில் மாஜரீன் வைக்கும் இடத்தில் வைக்கலாம். இந்த இடத்தில் குளிர் குறைவு. மீண்டும் பயன்படுத்தும்போது வெளியில் எடுத்து அறை வெப்பத்தில் வைத்து சமைத்தால் மணம் மாறாது.

### உபயோகிக்கும் முறைகள்.

❖ குளிர்ந்த நீரில் கழுவிக்கொள்ளவும். குறுக்காக வெட்டக்கூடாது, சாறு முழுவதும் வெளியில் வந்து விடும். பழத்தை மேற்புறம் வைத்து மேலிருந்து கீழாக மெல்லிய துண்டுகளாக வெட்டலாம்.

❖ ஷாண்ட்விச், பழச்சாறு செய்யும்போது கடைசியாக இதனைச் சேருங்கள்.

### மருத்துவப் பலன்கள்.

❖ தக்காளியைச் சாறாகச் சமைத்து, சாலட்டாக எந்த வடிவத்தில் சாப்பிட்டாலும் சுரப்பி மற்றும் குடல் உறுப்புக்களில் வரும் புற்று நோயைத் தடுக்க உதவுகிறது.

❖ அமினோ அமிலம் இருப்பதால் உடலுக்குப் பலம் உண்டாகிறது. இரத்த விருத்திக்கு உதவுகிறது.

❖ பச்சையாக சாப்பிட்டால் விற்றமின் C நிறையக்கிடைக்கும்.

❖ இதில் உள்ள உணவுச்சத்து விற்றமின் C 19 மில்லிகிராம், விற்றமின் A, கல்சியம் 21 மில்லிகிராம், சோடியம் 9 மில்லிகிராம். அதனுடன் கொஞ்சம் நார்ச்சத்தும் அடங்கியுள்ளது.

தக்காளியில் பொட்டாசியம் அதிகமாக இருக்கிறது. சிறுநீரகக் கோளாறு இருக்கிறவர்கள் தக்காளியைச் சாப்பிட்டால் பொட்டாசியத்தின் அளவு அதிகமாகி சிறுநீரக்கோளாறு வரலாம். அவர்கள் இதைத் தவிர்க்கலாம். முட்டுவருத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குளிர்காலத்தில் தக்காளி அதிகம் சாப்பிடக்கூடாது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஆறின கஞ்சி பழங்கஞ்சி

-தமிழ்ப் பழமொழி

# நமது நோக்கு

## ஆட்கொல்லியின் ஆபத்து!

**யாழ்.குடாநாட்டில் பரவிவரும் இனந்தெரியாத காய்ச்சலின் தீவிரத்திற்குப் பலியாவோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் போக்கில் காணப்படுகின்றது.**

**கடந்த சில தினங்களாக நாளொன்றுக்கு இருவர், ஒருவரென - பலியாகும் மக்களின் எண்ணிக்கை - இந்நோயின் அபாயத்தையும், உடனடித் தடுப்பு நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.**

**பொது மக்களிடையே இப்புதிய காய்ச்சல் பற்றிய அச்சவுணர்வு பரவலாகவே எழுந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.**

**இந்த அச்சம் - பதற்றத்தையும், பீதியையும் எட்ட முன்பு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியது கட்டாயமாகின்றது.**

**இது தொடர்பாக வைத்திய அதிகாரிகளும், யாழ். வைத்தியசாலை நிர்வாகமும் போர்க்கால நடவடிக்கையினை எடுத்து - ஆவன செய்ய வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.**

**இப்புதிய காய்ச்சல் பரவ ஆரம்பித்து - இதுவரை ஒரு மாதமாகின்ற நிலையிலும் - இன்னமும் இது 'இனந்தெரியாத காய்ச்சலாகவே' இருப்பதும், தடுப்பு மருந்துகள் இல்லையெனக் கைவிரிப்பதும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.**

**மக்கள் நலனை முன்னிறுத்தி - அதிகரித்து வரும் உயிரிழப்புக்களைத் தடுப்பதற்கு, அனைத்தையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு மிகுந்தவர்களுக்கு - இது, பொருத்தமான பதிலாகத் தெரியவில்லை.**

**தென்பகுதியிலிருந்து பரவும் டெங்கு இன வைரஸே இக்காய்ச்சலுக்குக் காரணமென யாழ்.வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் கூறினாலும் - அதனை உறுதி செய்ய முடியாத நிலையில் யாழ். வைத்தியசாலை இருப்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.**

**யாழ்.வைத்தியசாலைக்குப் போதிய ஆய்வுகூட வசதிகளோ, விசேடவைத்தியர்களோ, தேவையான மருந்துகளோ பற்றாக்குறையாக இருப்பதும் நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.**

**ஆனால் - இவற்றினைக் காரணம் காட்டி, அநியாய உயிரிழப்புக்கள் தொடர்வதை எவரும் நியாயப்படுத்திவிட முடியாது.**

**காய்ச்சல் ஆரம்பித்த ஒருசில தினங்களுக்குள்ளேயே நோயாளி அபாயக்கட்டத்தை எட்டி விடுவதும், தொடர்ந்து மரணத்தைத் தழுவுவதும் - இந்த நோயின் பயங்கரத்தையும், பாதிப்பின் வேகத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.**

**இந்த நிலையில் - உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாது போனால், மேலும் பல உயிர்களை இழக்கநேரிடும் என்ற நிலை பற்றி , இந்த ஆபத்தின் தீவிரம் பற்றி - தகுந்த நடவடிக்கைகளுக்கு ஏன் இத்தனை தாமதம் என்பது புரியாமலிருக்கின்றது.**

**இத் தாமதநிலைக்கு - யாழ். வைத்தியசாலையின வளப் பற்றாக்குறையின் காரணமா? துறைசார் மருத்துவர்களின் வெற்றிடமா? அல்லது கொழும்பிலுள்ள சுகாதாரப் பிரிவினரின் கவனக்குறைவு காரணமா? என எதுவாக இருந்தாலும் - பலியாகும் மனித உயிர்களுக்கு முன் இவற்றை வெறுமே காரணம் காட்டிக் கொண்டிருக்க முயல்வது, மனிதாபிமானத்திற்கு விரோதமானதாகும்.**

**தெற்கில் எங்கோ ஒரு மூலையில் டெங்கு பரவ ஆரம்பித்ததும் - விரையும் வைத்திய அதிகாரிகள் குழுவும், நாடு தழுவிய தேசிய அபாய அறிவிப்புமென துரித முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது- யாழ். மண்ணில் பலியாகும் உயிர்கள் பற்றிக் கவ லைப்படாதது, வேதனையையும் வியப்பையும் தருகின்றது.**

**இவ்விடயத்தில் - யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, பொது அமைப்புக்களோ இதுவரை கவனம் எடுக்காததும், உரிய நடவடிக்கைகளுக்கு இதுவரை எந்த அசைவையும் காட்டாததும் கண்டிக்கத்தக்கது.**

**யாழ். குடாநாட்டை அச்சுறுத்தும் - இந்நோயின் தாக்கத்திலிருந்து மக்களைக் காக்க, அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படாதவிடத்து, பலியானோர எண்ணிக்கை இன்னமும் அதிகரித்தே செல்லும் ஆபத்துள்ளதால் - அனைவருமே இவ்விடயத்தில் உடனடி அக்கறை காட்ட வேண்டியதுடன் செயற்பாடுகளிலும் இறங்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.**

# பயணம் முடியவில்லை

ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய அரசியல் தீர்வினை, உள்ளான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் மூலமாகக் காணலாம் என்று சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் ஒஸ்லோவில் இணைந்து அறிவித்துள்ளதை, அமெரிக்கா, பிரித்தானியா, ஐக்கிய நாடுகள் சபை உட்படப் பல நாடுகள் வரவேற்றுள்ளன. இதனையடுத்து, பேச்சுவார்த்தைகள் குறித்தும், சமாதானம் மூலமான தீர்வு குறித்தும் பரவலாக




**சமாதானத்திற்கு வித்திட்டவர்களும் தப்பவில்லை**

நம்பிக்கை எழுந்துள்ளது. புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய நம்பிக்கை மிகவும் பலமாக உள்ளதையும் நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பிரதேச சுயாட்சிமுறையைத் தம் அரசியல் யாப்பில் கொண்டுள்ள பல நாடுகளினது அரசியல் விதிமுறைகளை ஆராய்கின்ற பணியைத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆரம்பித்துள்ளது. இவ்வேளையில், எந்த நாட்டுக்குரிய சுயாட்சிமுறை இலங்கைக்குப் பொருந்தும் என்பது குறித்துச் சகல மட்டங்களிலுமிருந்தும் கருத்துக்கள் வெளியாகி வருகின்றன.

இந்திய அரசின் மந்திரிசபைச் செயலகத்தின் மேலதிகச் செயலாளராகப் பணிபுரிந்த ராமன் பல கருத்துக்களையும், கேள்விகளையும் முன்வைக்கின்றார். தமிழீழத் தனியரசுக் கோட்பாட்டைக் கைவிடாமல், தமிழீழ சுயாட்சிக் கோட்பாட்டை விடுதலைப்புலிகள் பரிசீலிக்க முனைந்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ள ராமன், இதனைத்தான் மீண்டும், மீண்டும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறி வந்துள்ளார் என்றும் கூறுகின்றார். விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கின்ற பிரதேச சுயாட்சி ஒரு தீவில் இரண்டு ஆட்சிகளையும், இரண்டு இராணுவத்தையும் கொண்டதா? என்றும் ராமன் கேள்வி எழுப்புகின்றார். இத்தகைய மாற்றத்தை எவ்வளவு தூரம் சிறிலங்கா அரசும் சிங்களமக்களும் ஏற்றுக் கொள்வார்கள்? என்று வினாவுகின்ற ராமன், தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகம் எவ்வாறு சிறிலங்கா அரசோடு இணைக்கப்படும்? என்றும், விடுதலைப்புலிகளின் இராணுவக் கட்டமைப்பு கலைக்கப்பட்டு, ஆயுதங்கள் எவ்வாறு கையளிக்கப்படும்? என்றும் கேட்டு, இந்திய மேலாதிக்கச் சிந்தனையை வெளியிடுகின்றார்.

சுவிஸ் நாட்டுக்குரிய சுயாட்சிமுறை தமிழரின் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வாக இருக்குமா? என்பதைவிட அதனைப் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? என்பதுபற்றி யோசிக்கவேண்டும் என்று சுவிஸ் நாட்டுப் பேராசிரியர் தோமஸ் ப்ளைனர் கூறியுள்ளார்.

பெரும்பான்மையினருக்கே சகலதும் என்ற கோட்பாட்டில் வகுக்கப்பட்ட பிரித்தானியாவின் **Westminister System** என்கின்ற அரசியற் கோட்பாட்டில், இவ்வளவு காலமும் ஏகபோக அரசியல் உரிமைகளைத் தாமே வைத்துக் கொண்டிருக்கும் சிங்கள-பௌத்த மக்கள் இதற்கு இணங்குவார்களா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகும் என்றும் இந்தப் போராசிரியர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இவரது கருத்தை உறுதிப்படுத்தும் வண்ணம், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் இத்தகைய அதிகாரப்பகிர்வுத் திட்டத்தை நிராகரித்து அறிக்கை விட்டுள்ளது. அரசியற் தீர்மானங்களை எடுக்கின்ற உரிமை சிங்களமக்களுக்கு மட்டுமே உண்டு என்று இலங்கை பௌத்த காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இந்தக் கருத்தையே ஜே.வி.பி.யினரும், சந்திரிகாவின் சுதந்திரக்கட்சியினரும் கூறிவருவது கவனிக்கத்தக்கதாகும்.

இத்தகைய சிங்கள-பௌத்த பேரின வாதம் குறித்துத்தான் தமிழீழத் தேசியத்தலைவர் எச்சரிக்கை செய்துள்ளார்- பெரும் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும், உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்துவரும் சமாதானப் பேச்சுக்களை, தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காக, சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பி விட்டால், அது தமிழ்மக்களைத் தனியரசுப்பாதையில் இட்டுச்செல்லும் என்பது திண்ணம். என்று குறிப்பிட்ட தேசியத்தலைவர் சமாதானம் வெற்றிபெறுவதற்கு சிங்களமக்களின் ஒத்துழைப்பையும் நாடி வேண்டுகோள் விடுக்கின்றார்.

நிலையான சமாதானத்தையும், இன ஒருமைப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும் சிங்கள மக்கள் விரும்புவார்களேயானால், இனவாத சக்திகளை இனம்கண்டு ஒதுக்க வேணடும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில், சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி, தம்மைத் தாமே ஆளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக்கூடாது. தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றித் தமிழர்களை பிரிந்துசெல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்களதேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியுள்ளது என்று தலைவர் கூறுகின்றார்.

சிங்கள மக்களை நோக்கி விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளில் உள்ள முக்கியத்துவத்தை தமிழ் மக்களாகிய நாம்- சிரத்தையுடன் கருத்திற்கொள்ளவேண்டும். இருபது ஆண்டு காலப் போரின் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நாம், நியாயமான, கௌரவமான, நிரந்தரமான தீர்வுக்காக ஏங்கி நிற்பதும், நம்பிக்கையோடு இருப்பதும் இயல்பான ஒன்றுதான். அதேவேளை, விழிப்போடு நிதர்சனத்தை உணர்ந்து நிற்பதும் அவசியமான ஒன்றல்லவா? தமிழீழ விடுதலைப்புலிகள் தமது முழுமையான ஆதரவையும், ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் இச்சமாதான முயற்சிக்கு அளித்து வருகின்ற வேளையில், அதற்கு முட்டுக்கட்டையாக விளங்குகின்ற உள்நாட்டு இனவாதசக்திகளையும், வெளிநாட்டு வல்லாதிக்க சக்திகளையும் நாம் இனம்காண வேண்டியது அவசியமல்லவா? அவை தடைபோட்டு நிற்கின்ற விடயங்கள்தான் என்ன?

உள்ளான சுயநிர்ணயத்தின் ஊடே, தமிழ்மக்கள் அவாவி நிற்கின்ற சுயாட்சியானது பரிபூரணமான சுயாட்சியாக இருக்கவேண்டும் என்று விடுதலைப்புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் அழுத்தமாகச் சொல்கின்றார். இதுவரைகாலமும் ஒற்றையாட்சி என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்த சிறிலங்கா அரசானது, இப்போது இரட்டை ஆட்சி என்ற கோட்பாட்டிற்கு இணங்கியுள்ளது. இணங்கினால் மட்டும் போதுமா? இதனைச் செயலாக்க வேண்டாமா? இதனைச் செயலாக்குவது என்றால், இலங்கையின் அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டும். இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்புத்தான் தமிழரின் இன்றைய போராட்டத்திற்கு மூலகாரணமாக உள்ளது என்ற உண்மை நாமெல்லோரும் அறிந்ததே!

பரிபூரணமான சுயாட்சியுடைய இரண்டு அரசுகள் என்ற வகையில் இலங்கையின் அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்படவேண்டும். அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்படவேண்டுமானால் அதில் ஆயிரத்தெட்டு விடயங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். உதாரணத்துக்கு ஒரு விடயம் :-

1987 ஆம் ஆண்டின் 13 வது சட்டத்திருத்தத்தின் 18 ஆவது அட்டவணை பின்வருமாறு கூறுகின்றது -

**The official language of Sri Lanka shall be Sinhala. Tamil shall also be an official language.**

நகைப்புக்கிடமாகத் தோற்றமளிக்கும் இந்தச் சொற்றொடர் உண்மையில் நகைப்புக்கு உரியதா? இல்லை! இந்தச் சொற்றொடரைச் சற்று ஊன்றிக் கவனித்தால், அன்றைய சிங்கள அரசின் விஷமத்தனம் நன்கு புரியும். சிறிலங்கா நாட்டின் **The Official Language** ஆகச் சிங்களம் இருக்கும். அதேவேளை **also, an,** என்ற குறியீடுகளுடன் வருகின்ற தமிழ்மொழி நாடு முழுமைக்குமுரிய உத்தியோகமொழி என்று குறிப்பிடப்படவில்லை. ஆங்கிலமொழியில் சொல்லும்



**கொளுந்து விட்டெரியும் பேரினவாதம் தருமா தமிழருக்கு உரிமைகளை...?**

போது **The Official Language of Sri Lanka** என்று முழுமையாகக் குறிப்பிடப்பட்டு, முழுமையான நாட்டிற்குமுரிய உத்தியோகபூர்வமான மொழியாகச் சிங்களம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், **an official language** என்று தமிழ்மொழி குறிப்பிடப்படும்போது, ஆங்கிலத்தில் சிறீலங்கா என்று குறிப்பிடப்படாமல், அது முழுமையான நாட்டிற்கும் உரித்தானதல்ல என்ற கருத்து மறைமுகமாகச் சொல்லப்படுகின்றது.

அன்பர்களே! ஆங்கிலேயர்களைவிட, தமிழர்களுக்குத்தான் ஆங்கிலமொழி நன்றாகப் புரியும் என்றும் சிலர் சொல்வதுண்டு. **The Official Language** என்பதற்கும், **an official language** என்பதற்கும் பாரிய வித்தியாசமுண்டு என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இதேபோலத்தான் பௌத்தமதம் அதிஉன்னத இடத்தை வகிக்கும் என்ற வார்த்தைப்பிரயோகமும், சிங்கள-பௌத்த பேரினவாதத்தை, தற்போதைய யாப்பில உறுதி செய்கின்றது. இவைகள் மட்டுமல்ல மாற்றம் செய்யப்படவேண்டியவை. சிங்கள-பௌத்த பேரினவாதத்தையும் மேலாண்மையையும் மனதிற்கொண்டு இயற்றப்பட்ட இந்த யாப்பில் மாற்றப்பட வேண்டிய விடயங்கள் எத்தனையோ உண்டு. புதிதாகச் சேர்க்கப்படவேண்டிய விடயங்களும் ஏராளம் உண்டு.

நன்கு வரையறுக்கப்பட்ட தமிழ்த் தாயகநிலம் என்று தலைவர் சொல்லியிருக்கின்றார். இந்தத் தாயகநிலமான தமிழீழம் புதிய யாப்பில் நன்கு வரையறுக்கப்படவேண்டும். அந்தச் சுயாட்சிபெற்ற தமிழீழத் தாயகத்தில் தமிழ்மக்கள் தம்மைத்தாமே ஆளுகின்ற உரிமை பெற்றவர்களாக வாழ்வதற்குரிய வகையிலேயே யாப்பு மாற்றம் செய்யப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தெளிவாக இந்த முக்கிய விடயங்களை விளக்கியுள்ளார்கள். இவற்றை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு சிங்கள மக்களிடமும், சிங்கள அரசிடமும்தான் உள்ளது. இவை எளிதான காரியங்கள் அல்ல என்பதை நாம் உணரவேண்டும். நம்பிக்கையுடன் நாமிருக்கும் வேளையில், நாசகார சக்திகள் குறித்து நாம் விழிப்பாகவும் இருக்கவேண்டும் என்பதைத்தான் நாம் மீண்டும், மீண்டும் சொல்லி வருகின்றோம். போராட்ட வழிமுறைகள் மாறலாம் என்று தலைவர் கூறியதற்கிணங்க; இன்று களநிலை அரசியற் போராட்டமாக வடிவெடுத்துள்ளது. ஆகவே போராட்டம் தொடர்கின்றது.

****

சபேசன் - மெல்பேர்ண்.

# 2300 ஆண்டுகள் பழமையான இந்துசமயத்தின் சிறப்புக்களை வெளிக்காட்டும் உலக இந்துமாநாடு

**அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த வரலாற்றுத்துறை பேராசிரியரும், 2ஆவது உலக இந்து மாநாட்டு செயலாளர் நாயகமுமான பேராசிரியர் சி. பத்மநாதனுடனான சந்திப்பு.**

*கேள்வி:-* இந்து மாநாட்டின் செயலாளர் நாயகம் என்ற வகையில், இம்மாநாடு என்றுமில்லாதவாறு தற்சமயம் நடத்த திட்டமிட்டதன் நோக்கங்கள் எவை என்பதைக் குறிப்பிட முடியுமா?

*பதில்:-* ஏறத்தாழ 2300 ஆண்டுகள் பழமைவாய்ந்த எமது இந்து மதம் பற்றிய பல்வேறு சிறப்புக்களையும், அவற்றின் பெருமைகளையும் எமது நாட்டுக்கும், ஏனைய நாடுகளுக்கும் உணர்த்துவதே இதன் நோக்கம். அத்துடன் இதுவரை காலமும் யுத்த சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் அமைதியையும், மகிழ்ச்சியையும் விளைவிப்பதுடன் மதங்களுக்கிடையிலானதும் இனங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டையும், விழிப்புணர்வையும் விளைவிப்பதுமாகும்.

*கேள்வி:-* இரண்டாவது உலக இந்து மாநாட்டுக்கு முன்னர் நடந்த இந்து மாநாடு பற்றிக் கூறமுடியுமா?




*பதில்:-* முதல் இந்து மாநாடு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் 1982 இல் நடைபெற்றது. அப்போது இடம்பெற்ற மாநாட்டை விட, இம்முறை உலகெங்கும் வாழும் 90 கோடிக்கு மேற்பட்ட இந்து மக்களின் விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையிலும், இலங்கையில் வாழும் இந்து மக்களின் உண்மை நிலையை உணர்த்தும்வகையிலும் புதிய மாநாடு இடம்பெறவுள்ளது. இம்மாநாட்டைச் சிறப்பாக நடத்து வதற்கு அமைச்சர் தி.மகேஸ்வரன் மிக அக்கறையோடு செயற்படுவது இங்கு குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாகும்.

*கேள்வி:-* இரண்டாவது உலக மாநாட்டின் நோக்கங்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

*பதில்:-* ஆம். இந்து சமயம், இந்து கலாசாரம் உலகநாகரிக வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவம், அறிஞர்களின் மிக நுட்பமான கருத்துக்களை- எமது தேசத்தவர்களுக்கும், பிற நாட்டவர்களுக்கும் அறிமுகம் செய்தல், சமகாலத்தில் உலக இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அவை பற்றிய புரிந்துணர்வையும் ஏற்படுத்தல், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் இந்துக்களின் பிரச்சினை பற்றி புரிந்துணர்வை ஏற்படுத்தல், கற்கும் மாணவர்களுக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுதல், இந்து மதத்தில் மிகவும் பெரும்பான்மையானோர் பின்பற்றும் சைவ சமயம் பற்றிய தெளிவை ஏற்படுத்துதல், பல்சமூக பண்பாட்டு உறவைப் பேணுதல், உலகம் தழுவிய சமாதான விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பனவாகும்.

*கேள்வி:-* இந்து மாநாடு நடாத்துவதற்குத் தற்போதைய அரசாங்கம் எந்த வகையில் பங்காற்றுகின்றது எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:-* கடந்த தேர்தலில் சமாதானம் என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் பெரும் வெற்றியீட்டிய ரணில் தலைமையிலான அரசு, இந்து கலாசார அமைச்சராக தி.மகேஸ்வரனை நியமித்ததோடு மட்டுமல்லாது, இம் மாநாட்டை நடத்துவதற்குப் பல்வேறு உதவிகளை வழங்கி வருவது பெரிதும் வரவேற்கத்தக்க விடயம். தற்போது இம் மாநாட்டை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பதற்குப் பிரதம மந்திரியை அழைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆரம்பத்தில் இரண்டு மில்லியன் ரூபா பணம் மட்டுமே அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது. பாவனைக்கு வாகன வசதி கூட இருக்கவில்லை. பின்னர் அமைச்சரின் விடாமுயற்சியும், பல்வேறு போராட்டங்களின் விளைவாக மேலதிக பணஒதுக்கீட்டை அடுத்த வருடத்தில் ஒதுக்கித்தருவதாக உறுதியளித்தமை பெரிதும் வரவேற்கக் கூடிய அம்சமாகும்.

*கேள்வி:-* இரண்டாவது இந்து மாநாடு கொழும்பில் மட்டும் நடைபெற உள்ளதா? அல்லது ஏனைய பிரதேசத்திலும் இடம்பெறச் சந்தர்ப்பம் உள்ளதா?

*பதில்:-* கொழும்பில் மட்டுமல்லாது ஏனைய பிரதேசங்களிலும் பெருமெடுப்பில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இந்து கலாசார அமைச்சின் பிராந்தியப் பணிப்பாளர் சிவமகாலிங்கம்- யாழ்ப்பாணத்து அறிஞர்களையும், இந்து மதத்தைச் சேர்ந்த நிறுவனங்கள், இயக்கங்களை ஒன்றிணைத்துக் குழுக்கள் அமைத்து, இந்து மாநாடு நடத்தத் திட்டமிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேபோல- வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி பிரதேசங்களிலும் குழுக்கள் அமைத்து இந்து மாநாட்டு நிகழ்வுகள் இடம்பெறச் செய்ய ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டு- இந்துசமயப் பேரவை, சமய இயக்கங்கள், மடங்கள், ஆதீனங்கள், மதகுருமார்கள் என்போர் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தாமாகவே இம்மாநாடு நடத்த முன்வந்திருப்பது முன்னேற்றகரமான செயலாக அமையும் எனலாம். இம் மாநாட்டை நடத்த பல்வேறு தரப்பினரும் உதவிகளை வழங்கிவருவது பெரிதும் வரவேற்கத்தக்க விடயம்.

*கேள்வி:-* இந்து மாநாட்டு ஒழுங்கமைப்பு முறைமை பற்றிக் குறிப்பிட முடியுமா?

*பதில்:-* அடுத்த ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி முதல் - நான்கு நாட்கள் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் உலகெங்கிலும் எமது நாட்டிலும் வாழும் சிவாச்சாரியார்கள், மதகுருமார்கள் அழைக்கப்படுவதுடன் செயலமர்வுகள், ஆய்வரங்குகள், கண்காட்சிகள், கலை நிகழ்வுகள், மாநாட்டு மலர் வெளியீடு, சிறப்பு ஊர்திப்பவனிகள் என்பன இடம்பெறவுள்ளன.

இம் மாநாட்டு மலர்- சமய கலாசார அடிப்படையில், சமய, கலை, இலக்கிய முறையிலும், சமகாலத்தில் இந்து மத வளர்ச்சி காலப்போக்கில் எப்படியாக அமைந்துள்ளது என்ற மூன்று பகுதியாக இடம் பெறவுள்ளது.

அடுத்து- ஆய்வரங்குகள் எமது நாட்டுப் பேராசிரியர்கள் உலகில் இருந்து வரும் அறிஞர்கள், பேராசிரியர்கள், இந்துவாதிகளால் நடத்தப்படும் நிகழ்வாக அமையவுள்ளது.

கலைநிகழ்வுகள்- எமது பிரதேச வெளிப்பாடாகவும் இந்திய சாஸ்திர மரபிலான மணிப்புரி, கதக் நிகழ்வுகள் மற்றும் பல்சுவை நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதுடன், பிரதேச ரீதியாக விசேட ஊர்திப்பவனி தலைநகரைச் சென்றடையவும் ஏற்பாடாகியுள்ளது. அத்துடன் எமது பண்பாட்டு உபகரணங்கள், தொல்பொருட்கள், இந்துமதப் பாரம்பரிய கலை வடிவங்கள், நூல்கள், நாணயங்கள் என்பன கொண்ட கண்காட்சி ஒன்றும் இடம்பெற உள்ளது. இதற்கு மேலாக இத்தகைய பொருட்களை தமிழ் நாட்டில் இருந்து இங்கு கொண்டு வருவதற்கும் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

*கேள்வி:-* அண்மைக் காலமாகத் தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து தொல்பொருட்கள் கடத்தப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?

*பதில்:-* ஈழத்தமிழரைப் பொறுத்தவரை அவர்களது தொன்மை, பண்பாட்டுத் தனித்துவம் என்பன தொல்



பேராசிரியர் சி. பத்மநாதன்

பொருட் கண்டுபிடிப்புக்களால் தெளிவு பெறும் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டுள்ளது. பலரும் நீண்ட காலமாக, கி.பி.13 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்- ஈழத்தில் பரவலான தமிழ்க்குடியிருப்புக்கள் இருக்கவில்லை எனவும், பிற்காலத்திலேயே தமிழ் அரசு தோன்றியது எனவும் கூறிவந்துள்ளனர். ஆனால் அண்மையில் வட இலங்கையில் குறிப்பாக வன்னியில் கிடைத்த பண்டைய தமிழர் நாணயங்களும், எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்களும் மிகப் புராதன காலத்திலேயே செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்ததையும்,

அவர்களிடையே சிற்றரசுகள், அரசுகள் தோன்றி வளர்ந்ததையும் உறுப்படுத்தியுள்ளன. இம் முடிவுகளை எதிர்காலத் தொல்லியல் ஆய்வுகள் மேலும் வளர்த்தெடுக்கும் என்பதை உறுதியாக நம்புகிறேன். இந்நிலையில் எமது பாரம்பரிய கலைச்சின்னங்கள் பிற இடங்களுக்குக் கொண்டு செல்வதைக் கட்டுப்படுத்துவது, எமது அடையாளத்தைப் பேணுவதற்கு மிக மிக அவசியமாகும்.

*சந்திப்பு:-*
**P. இராஜேஸ்வரன்**

## வெங்காயச் செய்கையில் நாட்டம்

(ஊரெழு)

ஊரெழு, கரந்தன் பகுதிகளில் இவ்வருடம் சிறு வெங்காயச் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து, பெருமளவு வெங்காயம் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் வெங்காயத்தின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் வெங்காய உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். (96)

## புதிய ஜனநாயகக்கட்சிக் கருத்தரங்கு

'சமாதான முன்னெடுப்புக்களும், எதிர்நோக்கும் சவால்களும்' எனும் விடயம் தொடர்பான புதிய ஜனநாயகக் கட்சியின் - பகிரங்கக் கருத்தரங்கு எதிர்வரும் 29ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு - சிற்றி ஹோலில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் தம்பையா தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில், நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதி ரூனா மரியா பியரிக், கட்சியின் செயலாளர் செந்தில்வேல் மற்றும் சட்டத்தரணி தேவராஜா ஆகியோரும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

## இளவாலையில் ஒளிவிழா

இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் ஒளிவிழா நிகழ்வு இன்று மாலை 7 மணிக்கு - புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்தந்தை. மகன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (41.71)

# சொல்லறம் காத்து வாழ்ந்தால் சுகம் பல தேடிப் பெறலாம்

''பேச்சென்பது'' உண்மை, நன்மை, அன்பு, நிதானம், இனிமை, ஆழம், சமயமறிதல், சபை அறிதல் என்ற எட்டு வகையான தன்மைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். உண்மையே பேசுக, நன்மையே பேசுக, அன்பாகப் பேசுக, நிதானமாகப் பேசுக, இனிமையாகப் பேசுக, ஆழமுடையதாக சிந்தித்துப் பேசுக, சமயம் அறிந்து பேசுக, சபையறிந்து பேசுக. பேசுவதெல்லாம் பேச்சாகாது, பேச்சு ஒரு சிறந்த "சொற்செல்வம்" ஆகும்.

சொல்லின் செல்வராக விளங்கினார் அநுமந்தர். சொல்லுக்கு உள்ள ஆற்றல்- வில்லுக்கும், கல்லுக்கும் கிடையாது. அதனால் தான் திருவள்ளுவர்,

"வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லேருழவர் பகை" என்கிறார். காற்றினும் கடிய வேகமுடையது சொல். அதனால் கம்பநாடர் "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்" என்றார்.

நாம் கடிதங்கள் எழுதும் பொழுது "நலம்" என்று எழுதுகின்றோம். உங்கள் நலன்களை எழுதுங்கள் என்றும் எழுதுகின்றோம். நலமறிய விரும்புகின்றோம். இவ்வாறாக நலங்கள் பல, மனைநலம், மக்கள் நலம், தனநலம், மனநலம், இனநலம், பிணியிலா நலம், உணவு நலம், இவ்வாறாகப் பல நலன்கள் உண்டு. அவற்றுள் தலையாய நலம் "நாநலம்".

"இறைவன் எங்கேயிருக்கிறான்? " என்று இரணியன் வினாவிய வினாவுக்குப் பிரகலாதர் "சொல்லினும் உளன்" என்று விடைபகர்ந்தார். சொல்லானது நலன்கள் கருவூலம் என அறியலாம்.

"சொல்" உண்மையுடன் கூடியதாக இருக்கவேண்டும் வேதம் தொடங்கும் போதே "சத்யம்வத" என்றுரைக்கின்றது. சத்தியமே நித்தியம், கடவுள் சத்திய வடிவானவர். சத்தியம் காத்து உயர்ந்தவன் அரிச்சந்திரன்.

**ஆன்மீக அரங்கம்**

"நன்மையே பேசுக" என்பதை அவதானிக்கின்றபொழுது உண்மை பேசினால் மட்டும் சிறப்பில்லை உண்மையில் நன்மை கலந்திருக்க வேண்டும். நன்மை விரவாத உண்மை உயர்வு பெறாது. நன்மையாகப் பேசவேண்டும்.

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமையிலாத சொல்" என்பது திருக்குறள்.

### "அன்புடன் பேசுக"

அன்பு கலவாத, இனிமையோ கனிவோ இல்லாத பேச்சு நன்மையாகாது. யாருடனும் அன்பு கலந்து பேசுதல் வேண்டும். அன்புடைய பேச்சு- ஊண், உள்ளம், உணர்வு, உயிர் எல்லாவற்றையும் குளிர்விக்கும். எனவே வாழ்வுக்கு ஒழுக்கம் இன்றியமையாதது போல் பேச்சுக்கும் அன்பு இன்றியமையாதது.

### "நிதானமாகப் பேசுதல்"

வெடுவெடு என்றும், வேகமாகவும், விமான வேகத்திலும் பேசுதல் கூடாது. இறைவனுக்கு மலரை எடுத்து வேகமாக அர்ச்சிக்கக் கூடாது. அதுபோல மெல்ல நிதானமாகப் பேசிக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்பமொழிதல் வேண்டும்.

### "இனிமையாகப் பேசுக"

பேச்சுக்கு உயிர்நாடி இனிமை. இனியவை கூறல் என்ற ஒரு அதிகாரமே வகுத்தார் திருவள்ளுவர். பணிவும் இன் சொல்லுமே ஒருவனுக்குச் சிறந்த ஆபரணம்.

"பணிவுடையன் இன் சொலன் ஆதல் ஒருவற்
கணியல்ல மற்றுப்பிற"

### "ஆழமுடைய பேச்சு"

ஒரு முறை சகுந்தலை என்பவள் தன் மகனுடன் துஷ்யந்தனுடைய அவைக்குச் சென்றாள். துஷ்யந்தன்- பெண்ணே! நீயார்? உன் கணவன் யார்? இம் மைந்தன் யாவன்? இங்கு ஏன் வந்தாய்? என்றெல்லாம் வினாவினான். இத்தனை வினாக்களுக்கும் ஆழமாகவும், அழகாகவும், சிந்தித்தும் சகுந்தலை சொன்ன விடை "மகனே பரதா! உன் தந்தையை வணங்கு" என்றாள். மன்னவன் வினவிய வினாக்கள் அத்தனைக்கும் இதில் விடையிருப்பதை ஆழ்ந்து பார்க்கலாம்.

### "சமயமறிந்து பேசுக"

சமய சந்தர்ப்பம் அறிந்து பேசுவது நமக்கு மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும். தலைவனிடம் சமயமறிந்து குறைகளைக் கூறிப் பணியாளர் நலம் பெற வேண்டும். மனைவி கணவனிடம் நேரம் அறிந்து கூறி, குறை நீக்கி நிறைவு பெறவேண்டும்.

### "அவையறிந்து பேசுக"

அவையறிந்து கூறுந் திறம் எல்லோருக்கும் வரவேண்டும். அவையறியாது பேசும் பேச்சு நோயறியாது கொடுக்கும் மருந்து போல் தீமை பயக்கும். எனவே உண்மையாகவும், நன்மையாகவும், அன்பாகவும் ,நிதானமாகவும், இனிமையாகவும், ஆழமாகவும், சமயமறிந்தும், சபையறிந்தும் பேசும் பாங்கினை வளர்த்தால் வையத்தில் வாழ்வாங்கு வாழும் முறைக்கு நாம் தகுதியுடையவர்களாவோம். சொல்லறம் காத்து சுகமுடன் வாழ்வோம்.

*கவிமாமணி. காரை எம்.பி அருளானந்தன்*

# ஈவினையில் வைரஸ் காய்ச்சல் 500 இற்கும் அதிகமானோர் பீடிப்பு!

(புன்னாலைக்கட்டுவன்)

ஈவினைப் பகுதியில் வைரஸ் காய்ச்சல் தீவிரமாகப் பரவிவருகின்றது.

இப்பகுதியில் ஐந்நூற்றுக்கும் அதிகமானவர்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். பலருக்கு இந்நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

நுளம்புகளின் பெருக்கம் அதிகளவில் காணப்படுவதால் இப்பகுதியில் மலேரியாக்காய்ச்சல் பரவும் அபாயமும் காணப்படுகின்றது.

(83)

# காசோலையைப் பெறுமாறு இந்து கலாசார அமைச்சு அறிவிப்பு

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற காசோலை வழங்கும் வைபவத்தில் காசோலையைப் பெற்றுக்கொள்ளாத ஆலயங்கள், நிறுவனங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் உரிய ஆவணங்கள், பற்றுச்சீட்டுக்கள் அனைத்தையும் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பித்து காசோலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு இந்து கலாசார அமைச்சின், பிராந்திய அலுவலக உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் அறிவித்துள்ளார்.

துர்க்காபுரம் மகளிர் இல்லம்- தெல்லிப்பளை, சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம்- திருநெல்வேலி, கலிகை கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை- கரவெட்டி, துறட்டி அம்மன் கோவில் பரிபாலன சபை - வட்டுக்கோட்டை, திருவண்ணைநகர் அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில்- யாழ்ப்பாணம், முள்ளியான் மண்டலப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபை- பருத்தித்துறை, வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்- தொண்டைமானாறு, கொற்றாவத்தை ஸ்ரீ ரமணன் ஆலய பரிபாலனசபை, அண்ண மகேஸ்வரர் ஆலய பரிபாலனசபை- ஏழாலை கிழக்கு, வண்ணை கோவல் முத்து விநாயகர் ஆலயம், ஸ்ரீ சிவ குருநாத குருபீடம்- கந்தர் மடம், ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோகணேஸ்வரர் கோவில்- திருநெல்வேலி ஆகிய ஆலயங்கள், நிறுவனங்களுக்கான காசோலைகளைப் பெற்றுக் கொள்ளப்படாதிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டாசு கொளுத்திக் காயம்

(யாழ்ப்பாணம்)

நத்தார் தினத்தில் பட்டாசு கொழுத்தி மகிழ்ந்த நபர் எதிர்பாராத விதத்தில் கைவிரல்களை இழந்தார்.

நேற்றுமுன்தினம் குருநகர் பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த கணகரட்ணம் கிருஷ்ணராஜா (வயது 31) என்பவரே கைவிரல்களை இழந்தவராவார்.

பட்டாசு கொளுத்தி நீண்டநேரமாக வெடிக்காத நிலையில் இருந்த வேளை அதனை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது திடீரென அது வெடித்தது. இதனால் அவர் தனது வலது கையில் மூன்று விரல்களை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ச)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு பொ.ஐ.மு.- ஜே.வி.பி. வேண்டுகோள்

மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்தும் அதன் நடைமுறைச்சிக்கல்கள் குறித்தும் ஆராய்வதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- இவ்வாறான யோசனை ஒன்றை பொ.ஐ.மு. வில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாசக் கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன் கடந்த மார்ச் மாதம் முன்வைத்திருந்தார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து இம்முயற்சி கைவிடப்பட்டது.



யாழ். மறை மாவட்ட இளைஞர் தினம் அண்மையில் யாழ். பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றபோது, யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக் குழு இயக்குநர் அருட்திரு. சாள்ஸ் கொலின்ஸ், யாழ். மாவட்ட இளைஞர் ஒன்றியத் தலைவர் ஜே.வோல்வின் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முறையே முதலாம், இரண்டாம் படங்களில் காணலாம். (லி)

# அதிர்ஷ்ட வாரம்

27-12-2002 தொடக்கம் 02-01-2003

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு, கடன் வசதி, நோய்நீக்கம், எடுத்தகாரியம் வெற்றி, பெண்கள் மகிழ்ச்சி, உடல் குளிர்ந்த உணவு, உளம் மகிழ்ந்த ஆடை அலங்காரம், மனஸ்தாபம், வீண்பயம், வாக்குவாதம், காரிய தாமதம் சமநிலை, பணவரவு, வீண் செலவு குறைவு, கணவன் மனைவி மகிழச்சி, புத்திரர் தேகசுகக் குறைவு, வீண் வாக்குவாதம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், தொழிலாளர்களுக்கு செய்தொழில் லாபம் குறைவு, சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் குறைவு, மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை, செவ்வாய், புதன் ஆகிய இருதினங்களில் புதிய காரியம் தொடங்குவது நன்றல்ல.

### இடபம்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பொதுச்சேவையில் வீண் பழிகேட்டல், பணவரவு, நோய் நீக்கம், எதிரி மௌனநிலை, பெண்கள் உளப்பூரிப்பு, சுற்றுலாச்சிந்தனை, நாகரிக உடை அணிவதில் இன்பம் காணுதல், பிதாவுக்கு வீண்செலவு, மனக்கசப்பு, மாதாவுக்குப் பணவரவு, சுகயீனம், வைத்தியச்செலவு, பூமியால் வரவு, கணவன் மனைவி தேகசுகக் குறைவு, மனச்சஞ்சலம், வாக்குவாதம், புத்திரர் மகிழ்ச்சி, வாகனப்பலன், வீண் செலவு, வீண் வாக்குவாதம், திருமணப்பேச்சு தாமதமடையும், தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், செய்தொழில் லாபம், மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

### மிதுனம்

மிருகசீரிடம் 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் வீட்டில் சுகயீனம், வைத்தியச் செலவு, வாகனச் செலவு, சமூக சேவையில் மனஸ்தாபம், பணவரவு, எதிரி மௌனம்,வீட்டில் மகிழ்ச்சிகரம், சுற்றுலா மகிழ்வு, அறுசுவையுண்டி, விதவிதமான ஆடையணிதல் மகிழ்வு, விருந்துபசாரம், பிதாவுக்கு பணவரவு நன்று, தொழில் வருவாய், தெய்வவழிபாடு, மாதாவுக்கு பணவரவு, மனமகிழ்ச்சி, இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படுதல், கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர் மகிழ்ச்சி, பணவரவு நன்று, தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு சண்டை, வாக்குவாதம், திருமணப்பேச்சு தாமதமடையும், தொழிற்சிறப்பு, செய்தொழில் முன்னேற்றம், ஞாயிறு திங்களில் புதிய காரியங்களில் ஈடுபடுதல் நன்றல்ல, மாணவர் கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

### கர்க்கடகம்

புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

இந்தராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படுதல், மனமகிழ்சசி, பணவரவு, பழைய கடன் வசூல், எதிரியின் தொல்லை குறையும், சமூகசேவையில் மதிப்புக்குறைவு, பிதாவுக்கு பணவரவு நன்று, தொழில் வருவாய், மாதாவுக்கு தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படுதல், பணவரவு நன்று, கணவன் மனைவி தேகசுகக்குறைவு, புத்திரர் சுகக் குறைவு, தேவையற்ற விடயங்களில ஈடுபடுதல் நன்றல்ல, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும், செய்தொழில் முன்னேற்றமடையும், தொழில் ஸ்தானத்தில் சிறப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் வரவுக்கு மிஞ்சிய செலவு, வீண் வாக்குவாதம், அயலில் மௌனம் சாதிக்கவும், பணவரவு வீட்டில் செலவு, வாகனச்செலவு, பொது சேவையில் மதிப்புகுறைவு, பிதாவுக்கு தேகசுகக் குறைவு, பணவரவு, மாதாவுக்கு தேகசுகக் குறைவு, பணவரவுகுறைவு, கணவன் மனைவி தேகசுகம் சமம், திருமணப்பேச்சு தாமதமடையும், புத்திரர்கட்கு பணவரவு, வீண்செலவு, வீண் வாக்குவாதம், தொழிற்சிறப்பு, செய்தொழில் லாபம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

### கன்னி

உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு, இவ்வாரம் விருந்தினர் வருகை அறுசுவையுண்டி, வரவுக்கு மிஞ்சிய செலவு, வீண் வாக்குவாதம், பண வரவு, ஆடை, ஆபரண மகிழ்வு, வீட்டில் செலவு, வைத்தியச் செலவு, வாகனச் செலவு, திருமணப் பேச்சு, வாரமுடிவில் முனனேற்றமடையும். பிதாவுக்கு தேகசுகக் குறைவு பணவரவு, மாதாவுக்கு தேகசுகக்குறைவு, கணவன் மனைவி தேகசுகம் சமம். புத்திரர்கட்கு தொழில்சிறப்பு குறைவு, பணவரபு, செய்தொழில் லாபம் குறைவு, தொழில் ஸ்தா னத்தில் சமபலன். கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபாரம் சமநிலை.

### துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு, இவ்வாரம் பணவரவு, வீண் செலவு, வீண் வாக்குவாதம், விருந்தினர் வருகை, உடல் குளிர்ந்த உணவு, உளம் குளிர்ந்த ஆடை அலங்கார மகிழ்வு, சேமிக்கும் சிந்தனை இல்லை, திருமணப் பேச்சு வார முற்பகுதியில் கலகலப்பாய் இருக்கும். பிதாவுக்கு தேகசுகம் சமம். பணவரவு, மாதாவுக்கு பணவரவு நன்று. தேகசுகம் சமநிலை, கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர்கட்கு வார முற்பகுதியில் புதிய காரியங்களில் ஈடுபடுவது நல்லதல்ல, பணவரவு, தொழிற்சிறப்பு, செய்தொழில் லாபம் சமம். தொழில் ஸ்தானத்தில் சமநிலை. மாணவர் கல்வி சமநிலை, வியாபாரம் சமநிலை.

### விருச்சிகம்

விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு, இவ்வாரம் பணவரவு, தெய்வவழிபாடு, சமய அறிஞர் நல்லுறவு, பெண்கள் மகிழ்ச்சி விருந்துபசாரம். கர்வநிலை மிதமிஞ்சிய உணவு, வீண்வாக்குவாதம், திருமணப் பேச்சு முன்னேற்றமடையும். பிதாவுக்கு பணவரவு சமம், தேக சுகம் சமம், மாதாவுக்கு பணவரவு நன்று, தேகசுகம் சமம், கணவன் மனைவி தேகசுகம் சமம். புத்திரர்கட்கு பணவரவு, தொழிற் சிறப்பு, சமூக சேவையில் மனஸ்தாபம், தொழில் ஸ்தானத்தில் சமநிலை, செய்தொழில் லாபம் சமம், மாணவர் கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு, சமூகசேவையில் மதிப்பு மரியாதை, வெளியூர்ப் பயணம், தெய்வதரிசனம், சமய அறிஞர் உறவு, வீண் வாக்குவாதம், வீண் செலவு, அயலில் மௌனம் சாதிக்கவும். திருமணப் பேச்சு வாரப் பிற்பகுதியில் முன்னேற்றம் காணும், பிதாவுக்கு தேகசுகம் இடையிடையே பாதிக்கும். பணவரவு சமம், மாதாவுக்கு பணவரவு நன்று, தேகசுகம் இடையிடையே பாதிக்கும், கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர்கட்கு தேகசுகம் சமம், பணவரவு நன்று, தொழில் ஸ்தானத்தில் சமநிலை, செய்தொழில் லாபம் சமம், தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர் கல்வி சமநிலை, வியாபாரம் சமநிலை.

### மகரம்

உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு சமம், பொதுச் சேவையில் கௌரவம், மரியாதை, தெய்வதரிசன பலன், சத்சங்கம், வெளியூர்ப் பயணம், பெண்கள் ஆடையலங்கார மகிழ்வு, வைத்தியச் செலவு, எதிரி தொல்லை, வீண்செலவு, வீண் வாக்குவாதம், திருமணப் பேச்சு வாரப் பிற்பகுதியில் முன்னேற்றம் காணும், பிதாவுக்கு தேகசுகம் இடையிடையே பாதிக்கும், பணவரவு நன்று, மாதாவுக்கு பணவரவு நன்று, தேகசுகம் சமம், கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர்கட்கு பணவரவு நன்று, பெண்களுடன் மகிழ்வு, வார இறுதியில் புதிய காரியம் தொடங்குவது நன்றல்ல, செய்தொழில் லாபம் சமம், தொழில் ஸ்தானத்தில் சமநிலை, மாணவர் கல்வி சமம், வியாபார நிலை சமம்.

### கும்பம்

அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு, இவ்வாரம் ஆரம்பத்தில் புதிய காரியங்களை தொடங்குவது நன்றல்ல; தேவையற்ற பயம், வைத்தியச் செலவு, செய்தொழில் லாபம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பு, தெயவதரிசன பலன், பஜனைகளில் ஈடுபடுதல், பெண்கள் மகிழ்ச்சி, திருமணப் பேச்சு தாமதமடையும், பிதாவுக்கு பணவரவு, தேகசுகம் இடையிடையே பாதிக்கும், மாதாவுக்கு பணவரவு, தேகசுகம் சமம், கணவன் மனைவி தேகசுகக் குறைவு, புத்திரர் பணவரவு, பெண்களால் மகிழ்வு, மாணவர் கல்வி சமம், வியாபாரம் சமம்.

### மீனம்

பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு, இவ்வாரம் நண்பர்கள், உறவினர்கள் வரவு, பெண்களால் மகிழ்வு, அறுசுவையுண்டி, ஆடையாபரண அலங்கார மகிழ்வு, சமூக சேவையில் மதிப்பு, தொழிற் சிறப்பு, செய்தொழில் லாபம், புதிய முயற்சியில் வெறறிகாணல், எதிரிகள் தொல்லை, வைத்தியச் செலவு, ஞாயிற்றுக்கிழமை தூரப் பிரயாணம், புதிய காரியங்களில் ஈடுபடுவது தவர்க்கவும், திருமணப் பேச்சு தாமதமடையும், பிதாவுக்கு பணவரவு சமம், தேகசுகம் இடையிடையே பாதிக்கும, மாதாவுக்கு பணவரவு நன்று, தேகசுகம் சமம், கணவன் மனைவி தேகசுகம் சமம், புத்திரர்கட்கு பணவரவு சமம், வீண்வாக்குவாதம், மாணவர் கல்வி சமம், வியாபாரம் சமம்.

யாழ். கொக்குவில்
இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின்
புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**English Academy**
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.
Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு உங்கள் பிள்ளைகளை சேருங்கள்
(சி-304)

# பல்கலைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தொகை வீழ்ச்சி

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகைமை பெற்று, இவ்வருடம் பல்கலைக்கழகத் தெரிவுக்காக விண்ணப்பித்த மாணவர்களின் தொகை கணிசமாக வீழ்ச்சியடைந்திருப்பதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பல்கலைக்கழக அனுமதிக்காக 98 ஆயிரத்து 432 மாணவர்கள் விண்ணப்பித்தனர். இவர்களில் 12 ஆயிரத்து 760 பேர் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர்.

ஆனால், இவ்வருடம் 75 ஆயிரம் மாணவர்களே தெரிவுக்காக விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்த அவர், சுமார் 23 ஆயிரத்தால் தெரிவுக்காக விண்ணப்பிக்கும் மாணவர்கள் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. இது கடந்த வருடம் மொத்தமாக விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கையில் 25 சதவீதமாக உள்ளதாகவும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடத்தைவிட பல்கலைக்கழகத் தெரிவுக்காக விண்ணப்பித்த மாணவர்களின் தொகை கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் தமக்குப் புரியவில்லை என்றும், இது பல்கலைக்கழகக் கல்வி முறையில் மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையீனம் ஏற்பட்டிருக்கலாமோ எனச் சந்தேகிக்க வைத்துள்ளதாகவும் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக விரிவான ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நெல்லியடி...

காணிப்புக்குழுவின் உபதலைவரு உடனிருந்தார்.

இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்த 7500 பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இச்சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது. சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்கும் பணியில் ஒருவர் மட்டுமே செயற்பட்டு வருவதனால், ஆளணியைக் கூட்டி அனைவருக்கும் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் அதுவரை அனுமதிப்பத்திர சோதனை தணிக்கப்பட வேண்டுமெனவும் புலிகள் கேட்டுக்கொண்டனர்.

## வறிய பெண்களுக்கு

# தையல் இயந்திரங்கள் அமைச்சர் கையளிப்பு



"சமாதானத்தை விரும்பாத சிலர் சமாதானத்தைக் குழப்ப முயல்கினறனர். என்றாலும் எமது அரசு சமாதானத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க உங்கள ஒத்துழைப்பு வேண்டும்" என நேற்று யாழ்.அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற, கணவனை இழந்த பெண்களுக்கும், வறிய குடும்பப் பெண்களுக்கும் தையல் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் அமைச்சர் ரவி சமரவீர தெரிவித்தார்.

யாழ்.அரசாங்க அதிபர் பத்மநாதன் தலைமையில் நேற்றைய தினம காலை 10 மணியளவில் யாழ்.அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது. இதில் மங்கள விளக்கினை சமூக சேவைகள் அமைச்சர் ரவி சமரவீர, இந்து சமய கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ்.அரச அதிபர் பத்மநாதன், ஆகியோர் ஏற்றி வைத்தனர். இதனைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் தலைமையுரை ஆற்றினார். தமிழ் கூட்டமைப்பின், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர். (லி)

## சமாதானத்தை...

விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமும் விடுதலைப்`புலிகளும் பற்றுறுதியுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை குறித்து தென்பகுதியில் இருந்து வெளியாகும் விமர்சனங்கள் கவலை தருகின்றன. பொறுப்பற்ற முறையில் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிக் கடும்போக்காளர்கள், மக்களிடம் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். இது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

பொறுப்புள்ள அரசியல்வாதிகளும் அவ்வாறு நடந்துகொள்வது வேதனை தருகின்றது. உண்மை நிலைகளை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் குழப்பகரமான கருத்துக்களுக்கு இடம் கொடுக்காது சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதற்கு ஒத்தாசையையும் ஒத்துழைப்பையும் மக்கள் வழங்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (200)

## உயர் பாதுகாப்பு...

பட்டு மீளக்குடியேறுவதற்கு எல்லோரும் ஏற்றுக்கொள்வோம். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஏற்றுக்கொள்கிறது. இராணுவமும் ஏற்றுக் கொள்கிறது. எல்லோருக்கும இதுவே விருப்பம். ஆனால படைச்சமநிலை இருக்கிறது. புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இந்தப் படைச்சமநிலையின் விளைவாகத்தான் போர் நிறுத்த ஒப்பந்தம் உருவாகியிருக்கிறது.

படைச் சமநிலையை குறைப்பதற்கு நாங்கள் விரும்பவில்லை. அதன் மேல்தான் அனைத்தும் தங்கியிருக்கின்றது. அதனால் தான் உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள் குடியேற்றம் கவனமாக செய்யவேண்டுமென்று கண்காணிப்புக்குழு கருதுகின்றது. ஆயுதக் களைவு என்பது படைச் சமநிலையைக் குழப்பக் கூடிய ஒன்று. இந்தச் சமயத்தில் ஆயுதக் களைவு பற்றிப் பேசுவது காலத்திற்குப் பொருந்தாத, அவசரப்பட்டுப் பேசுகின்ற விடயம். சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தங்கள் இராணுவ நிலைகளை அதே இடத்தில் பேண வேண்டுமென்று விரும்புகிறார்கள். அடிப்படையில் இது போர் நிறுத்த உடன்படிக்கையில் அமைந்துள்ளது.

எப்படி மக்களை மீளக்குடியமர்த்துவது என்பது பற்றி இருதரப்பும் பேசிக்கண்டு பிடியுங்கள். பாதுகாப்பையும் படைநிலைச்சமநிலையையும் பாதிக்காமல் எவ்வாறு படிப்படியாக குறிப்பிட்ட இடங்களில் மக்களை எவ்வாறு மீளக்குடியேற்றலாம என்பது பற்றி பேசுங்கள் என்பது தான் எமது கோரிக்கை என ஜெனரல் புறூவ் ஹொவ்டே மேலும் தெரிவித்தார்.

A/L2005
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி - 4
காலை - 8.00 மணி
D.M.I
(சி-345) யாழ்.நகர்

# மீள்குடியேற்ற நிபந்தனைகள்...

கட்டத்தில் மீள்குடியேற்றம் என்ற மனிதாபிமானப் பணிக்கு இத்தகைய நிபந்தனையை விதிப்பது சமாதான முயற்சியைக் குழப்பும் நோக்குடன் திட்டமிடப்பட்ட ஒன்று என இந்த அறிக்கை கூறுகின்றது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்.குடாநாட்டில் பொதுமக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்புவது, இராணுவப் பிரசன்னத்தின் தீவிரம் குறைக்கப்படுவது என்பன தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தின் யாழ்ப்பாணத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, சிறிலங்கா போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியுள்ள ஆவணத்தை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தீவிர பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது.

கடந்த இரு தசாப்தங்களாக சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையின் விளைவாக, பெருமளவு தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் வீடுகளில் இருந்து இடம்பெயர நேரிட்டமை, சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினராலும் மிக ஆழமான, மனிதாபிமான கரிசனைக்குரிய விடயம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே, 2002 பெப்ரவரி மாதம் இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில், யாழ். குடாநாட்டில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதும், இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறுவதும் பிரதான கடப்பாடாக இழையோடுவது இந்த அம்சங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டி நிற்கிறது. கவலைக்குரிய விதமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள இந்தக் கடப்பாடுகள் இதுவரை சிறிலங்கா இராணுவத் தரப்பால் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இது தொடர்பாக ஏற்பட்டுள்ள சிறிதளவு முன்னேற்றம்கூட கணிசமான மக்களின் எதிர்ப்பாலும், சர்வதேச அழுத்தங்களாலும் மாத்திரமே இராணுவத் தரப்பால் பெரிதும் விருப்பமின்றி எய்தப்பட்டன எனலாம்.

இயல்பு நிலையை மீளக் கொணரும் பிரச்சினை, தமிழீழ விடுதலைப புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் தாய்லாந்திலும் நோர்வேயிலும் நடந்த நேரடிப் பேச்சுக்களின்போது பல தடவை பேசப்பட்டது. இப்பிரச்சினையை விரைவாகத் தீர்ப்பதற்குள்ள அவசர தேவையை கருத்திற் கொண்டே உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளுக்கெனவும் (SIHRN) இராணுவத் தீவிரத்தைக் குறைத்து இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கெனவும் (SDN) இரு உப குழுக்கள்' அமைக்க நேர்ந்தது.

ஜெனரல் பொன்சேகாவால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தைக் கவனமாகப் பரிசீலிக்கும்போது, சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாண மக்களின் அவசர வாழ்வியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சிறிதளவேனும் தளர்வு நிலை கொண்டுவரத் தயாராக இல்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. உண்மையில் இப்பிரச்சினைகள் பாதுகாப்புப்படையினரின் சொந்த வசதிகள், கரிசனைகள் என்பவற்றிற்கு அடுத்ததாக இரண்டாம் பட்சமே என்ற விதமாகச் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆவணத்தில் இழையோடும் காழ்ப்புணர்ச்சியும், பகைமைத்தொனியும் ஒருபுறமிருக்க, யாழ்ப்பாண மக்கள் முகம் கொடுக்கும் இடர்களைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குச் சாதகமாக அமைந்துவிட அனுமதிக்கக்கூடாது எனும் அளவிற்கு மக்களின் இடர்களை சிறிலங்கா இராணுவம் தரம் குறைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டு நடைமுறையிலிருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரமும் அதன் பின்பு ஏற்பட்ட இணக்கப்பாடுகளுக்கு இசைவாகவும் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கு, சிறிலங்கா இராணுவம்- இப்போது விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதையும் அவற்றைச் செயலிழக்கச் செய்வதையும் நிபந்தனையாக்குவது இங்கு முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. இந்நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவை அல்ல. இவை யதார்த்தத்திற்கும் புறம்பானவை.

சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எய்தப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவான கடப்பாடுகளை சிறிலங்கா இராணுவம் மதிக்க மறுப்பது, நடந்து கொண்டிருக்கும் சமாதான நடவடிக்கையை தீவிரமாகப் பாதிக்கும் என்பது திண்ணம். எல்லாத் தரப்பினராலும் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கும் படிப்படியான அணுகுமுறை உண்மையில் இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நோக்கம் கொண்டது. இந்த வகையில் ஏற்கனவே இணக்கப்பாடு கண்ட ஒப்பந்தங்களை, சிறிலங்கா இராணுவம் மதிக்க மறுப்பது- கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கைகளைக் கணிசமான அளவு குறைக்கும். குறிப்பாக சிறிலங்கா இராணுவத்தின் தீவிரக் குறைப்புக்கான புதிய நிபந்தனைகள் தீவிரக்குறைப்பு, இயல்பு நிலை தொடர்பான உப குழுவை அர்த்தமற்றதும் பயனற்றதுமாக்கி விடுகின்றது. இந்த உபகுழு அ[...]க்கப்பட்டதன் நோக்கமே, இரா[...]வம் ஆக்கிரமித்திருக்கும் பொதுமக்களின் வீடுகளையும் ஆதனங்களையும் அவற்றின் உரித்துடைய சொந்தக்காரர்களுக்கு மீளளிப்பதற்கான வேலைத்திட்டத்தை வகுப்பதற்கே. ஆகவே, தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதும் கனரக ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்வதும் என்ற சிறிலங்கா இராணுவத்தின் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிபந்தனைகளை இராணுவம் வலியுறுத்தி நிற்கும் வரை, இந்த உபகுழு மேலும் சந்திப்பதில் எவ்வித பயனும் இல்லை. சிறிலங்கா இராணுவம் உயர் பாதுகாப்பு வலயங்கள் என வகைப்படுத்தி ஆக்கிரமித்து நிற்கும் பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற அனுமதிப்பதில் தயக்கம் காட்டுவது, உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் செயற்பாடுகளுக்கும் குந்தகமாய் உள்ளது என்பதையும் நாம் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

சிறிலங்கா இராணுவம் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவே உள்ளதென்பது தெளிவாகத் தெரிகிறது. சிறிலங்காவின் பிரச்சினைத்தீர்வு முயற்சிகளில் இராணுவத்தின் இத்தகைய நிலைப்பாடு எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தும என்று நன்கு அறிந்து கொண்டே இராணுவம் இத்தகைய கடும்போக்கை கடைப்பிடிக்கின்றது. ஆகவே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தனக்குள்ள கடப்பாடுகளையும் அதன் பின்னால் சிறிலங்கா அரசு செய்து கொண்டுள்ள உறுதிப்பாடுகளையும் சிறிலங்கா இராணுவம் மதிக்க மறுப்பதுடன் யாழ்ப்பாண மக்களுக்குள்ள இடர்களைத் தளர்த்துவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிபந்தனைகளை விதித்து நிற்கிற[...] என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போராட்டம்....

ஒப்படைக்கப்படும் என்றும் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கைக்குழு அமைக்கப்படும் எனவும் இளம்பரிதி நேற்றைய சந்திப்பில் உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து மறியற் போராட்டம் முடிவுக்கு வந்தது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.42 | 96.87 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 153.65 | 154.94 |
| 1 யூரோ | 99.28 | 100.32 |
| 1 சுவிஸ் பிராங் | 68.24 | 69.27 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 54.05 | 54.86 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.78 | 25.78 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.